விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 25 சனிக்கிழமை (11.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297




# சர்வகட்சிக் குழுக் கூட்டம் இன்று

# ஜனாதிபதி தலைமையில் கூடுகிறது

## ஐ.தே.க., ஜே.வி.பி. பங்கேற்காதாம்

(கொழும்பு)

சர்வகட்சிக் குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் சகல அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் கலந்து கொள்ள மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மேந்திரன் (வயது 49) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய வேளையிலேயே இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் சடலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் புதிய ஆளுநர் நேற்றுப் பதவியேற்பு

(கொழும்பு)

வட மாகாணத்தின் புதிய ஆளுநராக டிக்ஷன் டெலா பண்டார ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சப்ரகமுவ மாகாண ஆளுநராக மொஹான் எல்லாவல நியமிக்கப்பட்டார். இதனையடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தனிப்பட்ட விரோதமெதுவும் இல்லை



### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் தனக்கு எந்தவிதமான தனிப்பட்ட விரோ தமும் இல்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ★பட்டதாரி ஆசிரியர்களுக்கு★ நியமனம் வழங்கும் நிகழ்வினை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 387 பட்டதாரி ஆசிரியர்களின் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த, யாழ்ப்பாணப் பாடசாலைகளில் நியமனம் பெற்றவர்களுக்கான கடிதம் வழங்கும் நிகழ்வு இம் மாத இறுதியில் நடாத்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் விழாவில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கவுள்ளார்.

அத்துடன் இவ் விழாவினைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட

❖ க.பொ.த. (சா/த) பரீட்சை கணிதம் (வினாத்தாள்)

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை உயிரியல்

(பாட அலகு ரீதியான விளக்கம்)

## சென்னையில் மறியல் போராட்டம் நடத்திய வை.கோ. உள்ளிட்ட ஆயிரம் பேர் கைது

(சென்னை)


இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய அரசு வழங்கி வரும் இராணுவ உதவிகளைத் தடுத்து நிறுத்திட வலியுறுத்தி ம.தி.மு.க. சார்பில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் அக் கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ. உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தி வரும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இப் பிரச்சினையில் இந்திய அரசு அந்நாட்டு அரசுக்கு உதவி வருவதைக் கண்டித்தும் ம.தி.மு.க. சார்பில் சென்னையிலுள்ள வருமான வரித்துறை அலுவலகம் முன் மறியல் போராட்டம் நடை பெறும் என்று அக் கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

மேலும் மறியலுக்கு முன் சென்னை அண்ணா (12 ஆம் பக்கம் பார்க்க)



## பரந்தனில் விமானத் தாக்குதல் தாய், மகள் உட்பட மூவர் பலி



### மேலும் ஆறு பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

பரந்தன் பகுதியில் உள்ள குமரபுரம்என்னும் இடத்தில் நேற்றுக் காலை 6.25 மணியளவில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் தாயும் மகளும் உட்பட மூவர் கொல்லப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய கூட்டணி அரசிலிருந்து கருணாநிதி விலக வேண்டும்

### ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இருக்குமானால் மத்திய கூட்டணியிலிருந்து கருணாநிதி விலக வேண்டும் என ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கவென தமிழக முதலமைச்சர் கருணாநிதி எதிர்வரும் 14 ஆம் திகதி கூட்டவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தினைப் புறக்கணிக்கப் போவதாகவும் அ.இ.அ.தி.மு.கவும் ம.தி.மு.கவும் அறிவித்திருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு தனது முழு ஆதரவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கருத்தரங்கும் விரிவுரையும்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் கல்வியாண்டு 2007/2008 முதலாம் வருட மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் விரிவுரையும் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வணிகத் துறை விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளன.

வணிகம், முகாமைத்துவம் ஆகிய இரு கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களையும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு பீடாதிபதி க.தேவராஜா கேட்டுள்ளார். (ச)

# கொழும்பில் தேடுதல் இளைஞர்கள் மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பொறலஸ்கமுவவில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில் மலையக தமிழ் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில் பொறலஸ்கமுவவில் தொழில் புரியும் மலையக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொறலஸ்கமுவவில் உள்ள சில வியாபார நிலையங்களில் பொலிஸார் தேடுதல் நடத் தினர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பயணம் செய்த வாகனத் தொடரணி மீது நேற்று முன்தினம் பிற்பகல் பொறலஸ்கமுவ பிரிவேனா சந்தியில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலின் பின்னர் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதுவரை பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதேவேளை, நேற்றுக் காலை முதல் கொழும்பு நகருக்குள் சென்ற வாகனங்கள் அனைத்தும் பிரதான நுழைவாயில்களில் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# யாழ். தபால் திணைக்களத்தின் இறுதிப் போட்டிகள் நாளை

(யாழ்ப்பாணம்)

உலக தபால் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணையுடன் யாழ். தபாலக விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்களுகிடையேயான மென்பந்து, கரப்பந்து சுற்றுப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். தபால் திணைக்கள அணியை எதிர்த்து பிரதேச சபை வலி. கிழக்கு அணி மோதவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் மென்பந்து துடுப்பாட்டத்தில் யாழ். தபால் திணைக்கள அணியை எதிர்த்து யாழ். போதனா வைத்தியசாலை அணி மோதவுள்ளது.

இவ் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட பிராந்திய தபால்மா அதிபர் வீ.குமரகுருவும் கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.அருளானந்தமும் கலந்து கொள்கின்றனர். இப்போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# கலை கலாசாரப் பேரவை செயற்குழுக் கூட்டம்

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுக் கொள்கின்றார். (ஓ)




ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவன்று புதிதாக அமைக்கப்பட்ட சமையல் கூடத்தை யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் திறந்து வைப்பதையும் அருகில் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# $O^+$ இரத்தம் அவசரம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஓ பொசிட்டிவ் ( $O^+$ ) வகை இரத்தம் தேவைப்படுவதால் ஓ பொசிட்டிவ் இரத்த வகை உள்ளவர்கள் இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உதவும் படி இரத்தவங்கிப் பொறுப்பாளர் டாக்டர் இ.சிவசங்கர் கேட்டுள்ளார். (அ)

# விண்ணப்பம் கோரல்

2008/2009 ஆம் ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பாடநெறிகள் கொழும்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும்.

விண்ணப்பங்கள் 10.11.2008 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண் டும்.

மேலதிக தகவல்களுக்கு 10.10.2008 வர்த்தமானியையோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ)

# சீமெந்து விநியோகம்

அபிவிருத்தி, புனரமைப்பு வேலைகளுக்காக சீமெந்து கோரிக்கைகளை மாவட்ட செயலகத்திற்கு முன்வைத்தவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஒதுக்கீட்டு பட்டியல் யாழ். வணிகர் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரிய விபரத்தை இல. 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகத்தில் பார்வையிட்டு அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய பொருத்தமான நிறுவனங்கள் மூலம் பயனாளிகள் உடனடியாக பணத்தினை செலுத்தி சீமெந்தினை பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத் தந்துள்ளார். (ச)

## 2010 இல் நூற்றாண்டு விழாக் காணும்

# மூன்று கல்லூரிகள் மோதும் இருபது -20 கிரிக்கெட் திருவிழா

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**



இருப்பவர்கள்: (இடமிருந்து வலம்):- சு.சாந்தகுமார் (ஆசிரியர்) த.ரமேஸ் (அணிப் பொறுப்பாசிரியர்) லோகபமிலன் (உப தலைவர்) க.சிவனேஸ்வரன் (அதிபர்), ஆ.ஹரிதரன் (அணித் தலைவர்) சு.உதயணன் (விளையாட்டு முதல்வர்) பொ.வசந்தன் (விளையாட்டுத்துறை செயலாளர்)

நிற்பவர்கள்: (இடமிருந்துவலம்) ந.மதிராஜ், அ.ஜீவராஜ், சி.யாழினியன், க.நிஷாந்தன், உமாசங்கர், நா.பிரசாத், பா.ஜனார்த்தனன், உ.ஜெல்சின், டுசேந்திரன், அஜித், சியாளன். க.சாந்தகுமார், ஏ.தனேஸ், வி.டேவிற்.


**கொக்குவில் இந்துக் கல்லூரி**



இருப்பவர்கள்:(இடமிருந்துவலம்):- எஸ்.கோகுலன் (பயிற்சியாளர்), எஸ்.உமாசுதன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்) எஸ். வல்லவகுமரன் (அணித்தலைவர்) அ.அகிலதாஸ் (அதிபர்), எஸ். வாகீசன் (உப தலைவர்),ஐ.சசிக்குமார் (ஆசிரியர்), ஆர்.பிரதீபன் (பயிற்சியாளர்).

நிற்பவர்கள்: (இடமிருந்துவலம்):- ஆர்.பவீந்திரன், பி.பவிராஜ், பி.நிதர்சன், என்.கார்த்திக், நா.நிரூஜன், நி.நிரோஜன், கே.நிரோஜன், இ.றேகன்,சி.கோபிகன், உஸ்.உத்தமகுமரன், சி.மயூரன், வி.ஜனார்த்தனன்.

**மகாஜனக் கல்லூரி**



இருப்பவர்கள்: (இடமிருந்து வலம்):- க.மயில்வாகனம் (பொறுப்பாசிரியர்), இ.சிறிதரன் (பயிற்றுநர்), ம.கோகிலதாஸ் (அணித்தலைவர்), சி.அனந்தசயனன் (அதிபர்), ப.பார்த்தீபன் (உபதலைவர்), நா.புனித தயாபரன்.

நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்):- பு.தயாளன், அ.நிலக்ஷன், க.கபிலன், சி.டிலக்ஷன், ச.கோகிலன், கே.அருட்செல்வன், ம.மதன்ராஜ், ம.கஜதீபன், ம.எலிமோ,நிக்ஷன், ரி.விஷ்ணுகாந்த், வி.கபில்தேவ், சி.ஜெயரூபன், அ.பிரசாத், கு.மோசிகீரன்

## மானிப்பாய் இந்துவில் இன்று ஆரம்பம்

2010ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் காணும் மானிப்பாய் இந்துக் கல்லூரி,கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரிகளுக்கு இடையிலான இருபது - 20 கிரிக்கெட் முக்கோணத்தொடர் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

மூன்று கல்லூரிகளும் 2010 ஆம் ஆண்டு நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள நிலையில் கல்லூரிகளுக்கிடையிலான நட்புறவை ஏற்படுத்தும் வகையில் இத் தொடர் நடத்தப்படுவதாக போட்டியை நடாத்தும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர். ச.சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் மூன்று பிரதேச மாணவர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி கல்லூரிகளின் வளர்ச்சியை முன்னெடுக்கும் வகையிலேயே இத் தொடர் நடாத்த திட்டமிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தொடரைத் தொடர்ந்து கல்வி, விளையாட்டுத்துறை சார்ந்த போட்டிகள் மூன்று கல்லூரிகளும் இணைந்து நடாத்தும் எனவும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

மாணவர்கள் நெருக்கடியான காலகட்டத்தில் இருப்பதனால் அவர்களின் உடல் உள விருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடாக இது அமையும் என மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

எனவே 2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் காணும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி,மகாஜனக்கல்லூரி ஆகியன இணைந்து மாணவர்களை மகிழ்வுடன் வைத்திருக்கும் செயற்பாடுகளை 2010 ஆம் ஆண்டு வரை (11 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## பெண்களின் முதுமை

ஒரு பஸ் போய்க்கொண்டிருந்தது. கூட்டம் கொஞ்சம் அதிகம் தான். ஒரு பெண் மிகவும் சிரமத்துடன் ஒரு கம்பியைப் பிடித்து நின்றுகொண்டிருந்தார்.

கண்டக்டர் பார்த்தார். "அந்த அம்மாவுக்கு உட்கார யாராவது ஒரு இடம் கொடுங்க!" என்றார். ஒருவர் எழும்பி இடம் கொடுத்தார்.

ஆனால் அந்த அம்மா கோபமாக அந்தக் கண்டக்டரை முறைத்துப் பார்த்துவிட்டு அந்த இடத்தில் உட்கார்ந்தார். கடைசி வரைக்கும் முகத்தில் தெரிந்த அந்தக் கடுகடுப்பு மாறவேயில்லை!

எனக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

"அந்த கண்டக்டர் இரக்கப்பட்டு உங்களுக்கு ஒரு இடம் கொடுக்க சொன்னதும் நீங்கள் ஏன் கோபமாக இருந்தீர்கள்?" என்றேன்.

" பின்னே என்னங்க...? என்னைப் பார்த்து அம்மா என்கிறாரே! என்னைப் பார்த்தால் அவ்வளவு வயதாகவா தெரியுது? அந்த 'அம்மா' வுக்கு இடம் கொடுங்க என்று தானே சொன்னார். அது தான் எனக் குக் கோபம்! இப்ப நீங்களே சொல்லுங்க எனக்கு என்ன வயசிருக்கும்? "என்றார்.

நான் என்ன விவரமில்லாத ஆளா? மனதில் என்ன வயது நினைத்தேனோ அதில் 20 வயதைக்குறைத்து, "என்ன ஒரு 20 அல்லது 21 இருக்கும்." என்றேன்.

"நீங்கதான் ஜீனியஸ்" என்று சொல்லிவிட்டு அவர் சந்தோஷமாகப் போய்விட்டார்.

முதுமையை நாம் யாரும் ஆசைப்பட்டு கூப்பிடுவதில்லை. ஆனால் அதுதான் ஆசைப்பட்டு நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களுக்கு முதுமை விரைவாகவே வந்துவிடுகிறது.

இதைத் தெரிந்து கொள்வதற்காக அமெரிக்காவின் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கிறது. மனித உடம்பில் கலங்கள் தொடர்ச்சியாக இறந்து கொண்டே இருக்கும்! இதை கலங்களில் இனப்பெருக்கம் என்று சொல்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வயதாகும் போது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் புதிய கலங்கள் உண்டாவது குறைந்து விடும். அந்தச் சமயத்தில் தான் உடம்பில் தசைகள் சுருங்கத் தொடங்கி வயதான தோற்றம் உண்டாகிறது!

இதைப்பற்றி நடந்த ஆராய்ச்சிகளில் இந்த கலங்களின் இயக்கம் ஆண்களைவிட பெண்களுக்கு விரைவாகவே குறைய ஆரம்பிக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது.

குறிப்பாக ஆண்களுக்கு 35 வயதில் என்றால் பெண்களுக்கு 30 வயதில் இந்த இயக்கம் குறையலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் தான், சிலசமயம் கிட்டத்தட்ட ஒரே வயதில் கல்யாணமான தம்பதிகளை கொஞ்சநாள் கழித்துப் பார்த்தால், கணவனை விட மனைவிக்குத்தான் வயது அதிகமாகத் தோன்றும்.

பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்... குழந்தை பிறக்கிறதனால் தான் பெண்களுக்கு முதிர்ச்சி அதிகமாகிறது என்று! ஆனால் குழந்தைப் பேறுக்கும் முதுமைக்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிறது இந்த ஆராய்ச்சி.

ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணப்போனார். அந்த அம்மா 30 வருடமாக சினிமாவில் நடிப்பவர். அவரிடம் "உங்கள் வயது என்ன?" என்றார்.

அந்த அம்மாவும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் "இந்த ஜுன் வந்தால் 20 முடிந்து 21 ஆரம்பம்!" என்றார்.

இந்த நிருபர் தீடிரென தன்கையால் தன் தலையில் ஓங்கி குட்டிக் கொண்டார்.

"நான் ஏதாவது தப்பாக சொல்லி விட்டேனே? என் பதில் சரியில்லை என்றா நினைக்கிறீர்கள்?" என்றார் அந்த அம்மா.

அதற்கு இவர், "உங்கள் பதில் சரி. என் கேள்வி தான் சரியில்லை. இந்தக் கேள்வியை 20 வருடத்துக்கு முன் உங்களிடம் கேட்டிருக்க வேண்டும். நான் தான் லேட். அதுதான் குட்டிக் கொண்டேன்" என்று மறுபடியும் குட்டிக் கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில சொல்வதெழுதல் போட்டி முடிவுகள்

பாடசாலை மாணவர்களின் ஆங்கில சொற்களின் எழுத்துக் கூட்டுதல் திறனை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு யாழ். வலய பாடசாலைகளிடையே "ஆங்கில சொல்வதெழுதல்போட்டி" ஒன்றினை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆங்கிலமன்றம், யாழ் மாவட்ட றோட்டறிக்கழகத்துடனும் யாழ். மைய றோட்டறக்ட் கழகத்துடனும் இணைந்து கோட்டரீதியான பரீட்சைகளை கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை நடாத்தியது. இப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வலயமட்ட பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அறியும் முகமாக வலயமட்ட பரீட்சைக்குத் தெரிவாகிய மாணவர்களின்பெயர்விபரங்கள் வருமாறு

**யாழ்ப்பாணக்கோட்டம்**

*பிரிவு-I*

*யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி*

ஜெ.கே.ஹியசிந்ஹிரான், ஜெ.புலேந்திரன்தனுசன்,ஏ.எக்ஸ் சாம்சன், ஏ.செலான், எல். ஏ.லியோஆனர்ல்ட்,ஜெ.மைக்கல் வினுசன்

*யாழ் வேம்படிமகளிர் உயர் தரப்பாடசாலை*

லெ. சிடேசன், கு.சலோமி , இ.வரோனிதா, இ.அனோசா, சோ.திரியம்பகி

*யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை*

இ.ஆன் அனிசியா அன்சலா , சே.ஜனுசி ,டொ.மேரி டெபோறா

*யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி*

பா.மாதங்கி, ஹ.ஹன்னா நட்டாஷா,ம.ஜோய்காருண்யா, உ.சிந்துஜா

*யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி*

ஏ.பெஞ்சமின்.எம்.தருசிகன்.

*பிரிவு-II*

*யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி*

எஸ். செல்வதித்திலன் ,ரி.பிரிட்னோ பிரஜீஷ்

*யாழ் .வேம்படிமகளிர்உயர் தரப் பாடசாலை*

சி.சுமித்தா, இ.கோபிகா, நி.வாகினி, ந.மாதங்கி, பா.ஆரணி, கு.தனுசியா

*யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை*

சே. லிசி லிவிதா, சா. ஆரபி, நோ .மேரிமயூரி

*யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி*

ஜெ. லக்சி, ச.அபிரா, ச.சங்கீதா, சா.மதுரமி, வி. ஜெயவதனி

*யாழ். சென் ஜோன்ஸ்கல்லூரி*

ஏ. சஞ்சயன், எம்.ஜோன் பிரியந்த், என். கிருத்திகன், பி.அபிகரன்

**நல்லூர் கோட்டம்**

*பிரிவு-I*

*யாழ். இந்துக்கல்லூரி*

ஆர். வித்தகன்,பி.ஆர்த்தீபன் , ஆர். சிவனேஸ்வரன் ,பி. குணவர்ணன் ,சி. விவேக் விணுஷாந்த் , ஜி.நிஷாகரன் ,இ. பிரசாந்தன்

*யாழ். கொக்குவில் இந்து கல்லூரி*

எஸ். சிவாணுஜன் ,கே. அபிராம் ,எஸ். வெய் பிரணவன், எம். பிரணவன் ,எம். போதிநிதி ,ஆர். கேமவர்ணா

*யாழ். இந்து மகளிர் கல்லூரி*

எம். ஆர்த்மிகா , எஸ். பிரதீஷா , ரி. சிவனிகா ,கே. உஷாஜிகா ,எஸ். சுபலக்சுமி ,ரி. ஜன்சிகா

*யாழ். கனகரத்தினம்மத்திய மகா வித்தியாலயம்.*

ரி. பிரசாந்த்

*பிரிவு-II*

*யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி*

ஆர்.குருபிரியா ,ரி. தேவதயாராஜ் ,எஸ். சர்மி , பி. கயலக்ஷன் , வி. விஸ்ணுகா , எஸ். கீரண், வி. கார்த்திகன். பி. நவலக்ஷனா ,ஜே. திவ்யா

*யாழ். இந்து மகளிர் கல்லூரி*

பீ.சிவஜா ,பீ. சிந்துஜா ,எ. பிறேமி ,பீ பிரகலதா ,எஸ். சரண்யா, யு. கோபிகா ,வி. நாராஜனி

*யாழ்.இந்து கல்லூரி*

வி.சுஜீவன் ,இ. கௌசிகன் , என்.பிரணவரூபன் ,இ. பார்த்தீபன்

**கோப்பாய் கோட்டம்.**

*பிரிவு-I*

*யாழ். இடைக்காடு மகா வித்தியாலயம்*

ரி.லாரணி ,எஸ். விஷ்ணுஜா , கே. தர்ஷிகா ,ரி.தீபிகா ,ஜி. சிவதர்சன் ,என்.கஜேந்திரன் ,எம். கிரிஷாந்த்

*யாழ்.ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி*

கே. மயூரதி , வை. யம்ஷிகா , எம்.கஜானி ,எஸ்.ரஜிதா ,எஸ். நிருபா

*யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி*

எஸ். பொன்மாறன் ,எஸ். நிரோஜி ,எஸ்.இந்துஜா

*யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி*

எஸ்.ஜீவனா ,என்.யசோதா

*யாழ்.சென் திரேசா மகளிர் கல்லூரி*

ரி.பொன்ஷியா,வி.ரெவரன்ஷியா

*யாழ். ஆவரங்கால்நடராஜ ராமலிங்க வித்தி*

கே.அபிராமி

*பிரிவு-II*

*யாழ். இடைக்காடு மகா வித்தியாலயம்*

ரி.தமீரா ,எஸ்.குகமாறன் , எஸ். அனுதீபன், வி.சாருஜன் , எல்.மதுஷன் ,எம். வரதாஜினி ,ரி. தினேஸ்குமார்,பி.கிரிதாஸ்

*யாழ்.ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி*

எஸ். சர்வினி ,எம். புகழரசி , எஸ்.விந்துஷா

*யாழ் .அத்தியார் இந்துக் கல்லூரி*

எ.சுஜேந்தினி, ஆர்.உதயனா

*யாழ்.ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்*

ரி.வாசுகி, வி. நிலாஸ்வேணி

*யாழ்.சென்திரேசா மகளிர் கல்லூரி*

ரி.ஷெரின் கலிஸ்ரா

*யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி*

ஆர்.கஸ்தூரிராஜன் ,என். கஜலக்ஷி

*யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி*

ஆர்.வைஷிகா

*யாழ் கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்.*

ஆர். துளசி

(ஓ)

## இராசி பலன்

*11.10.2008*
*(புரட்டாதி 25, சனிக்கிழமை)*
*அவிட்டம் காலை 6.40 மணிவரை*
*துவாதசி பின்னிரவு 4.47 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02 -4.32 மணிவரை*
*சனிப்பிரதோஷ விரதம்*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், போசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, நிலை மாற்றம். |
| இடபம் | செய்தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி, சுபநிகழ்வு, |
| மிதுனம் | நிர்ப்பந்த நிலை, சரீரப்பிரயாசை, முயற்சி தாமதம் |
| கடகம் | மனச்சோர்வு, காரிய தடங்கல், கலகம், பணக்குறைவு. |
| சிங்கம் | குடும்ப மகிழ்ச்சி, சுபகாரியம், அபூர்வ சந்திப்பு, செல்வாக்கு. |
| கன்னி | சுபநிகழ்வு, உடல்நலம், பகைவர் நேசம், நல்ல முயற்சி. |
| துலாம் | வியாபார விருத்தி, பூர்வபுண்ணிய கருமம், காரிய இடையூறு, பிரயாணம். |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, புதிய விடயம், பெரியோர் உதவி, முயற்சி தாமதம். |
| தனுசு | வாகன சுகம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி. |
| மகரம் | குடும்பக் கவலை, பணவிரயம், காரிய தாமதம், போசன சுகம். |
| கும்பம் | தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி. |
| மீனம் | போசன சுகக்குறைவு,சுபசெலவு, தொழில் விருத்தி, பிரயாணம். |

வளவன்

# இன்று நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் ஐ.தே.கட்சி பங்கு பற்ற மாட்டாது

## கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா தெரிவிப்பு

சர்வகட்சி மாநாடு இன்று சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது. இதற்கான அழைப்பிதழ்கள் ஜனாதி பதியின் செயலாளர் வீரதுங்கவால் கையெழுத்திடப்பட்டு அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலரி மாளிகையில் இன்று சனிக்கிழமை நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் ஒரு கட்சியிலிருந்து நால்வரைப் பிரதி நிதித்துவப்படுத்துமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுவே இந்த வருடம் நடத்தப்படும் முதலாவது சர்வகட்சி மாநாடு. எனினும் அரசாங்கத்தால் நடத்தப்படும் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென தமது கட்சி ஏற்கனவே முடிவெடுத்திருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா தெரிவித்துள்ளார். இன்று உயிரிழந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் இறுதிக் கிரியைகள் நடைபெறுவதால் அனைத்து உறுப்பினர்களும் அதில் கலந்து கொண்டிருப்பார்கள் என அவர் குறிப்பிட்டார்.

மோதலில் வெற்றி பெறுவதெனத் தீர்மானித்த பின்னர் ஏன் அரசாங்கம் இவ்வாறு சர்வகட்சி மாநாட்டை நடத்துகிறது என திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்தார்.

இதே வேளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் இணக்கம் காணப்படாத விடயங்கள் சர்வகட்சி மாநாட்டில் கூடி ஆராயப் படுமெனவும் அதில் தீர்மானங்கள் எடுக்கப் படும் எனவும் முன்னர் அறிவிக் கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் திட்ட யோசனைகள் குறித்து அரசாங்கத்தின் சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்படாலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ)

## வளவாளர்களுக்கான கொடுப்பனவு விபரம்

கல்வி விருத்திக்கான பிரவேசக் கட்டமைப்பு மற்றும் வேலைத் திட்டங்கள் (ESDFP) மூலம் வளவாளர்களுக்கான கொடுப்பனவு விபரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் முதுமாணிப்பட்டம், கலாநிதிப் பட்டம் பெற்றவர்களுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 750 ரூபாவும் அகில இலங்கை சேவையிலுள்ள 1ஆம் வகுப்புகளில் உள்ளவருக்கு 600 ரூபாவும் அகில இலங்கை சேவையிலுள்ள 2ஆம் 3ஆம் வகுப்புகளுக்கு 450 ரூபாவும் ஏனையோருக்கு 400 ரூபாவும் வழங்க முடியும்.

இதேவேளை குறித்த வலயத்தில் பணியாற்றும் அலுவல்களைப் பயன்படுத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாயின் அவர்களுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கமுடியாது எனவும் ஒரு வளவாளர் ஒருநாளுக்கு 3 மணித்தியாலத்துக்கு மேற்படாமலும் வாரத்தில் 6 மணித்தியாலத்துக்கு மேற்படாமலும் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

## கௌரவிப்பு விழா

வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரியின் மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய வீராங்கனைகளைக் கௌரவிக்கும் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். ஓ

## மீள் நியமன விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட சுகாதார சேவைகள் தொடர்பான மீள்நியமன விளம்பரத்திற்கமைய ஏற்கனவே பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரியுள்ளதாகவும் புதிய நியமனங்களுக்கான ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை என்றும் அவ்வாறான புதியவர்கள், விண்ணப்பிப்பது அவசியமற்றது எனவும் யாழ்.சுகாதார சேவைகள் பதில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நா.சிவபாதம் அறிவித்துள்ளார். ஓ

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

நாடகமும் அரங்கியலும் துறைசார் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களின் நன்மை கருதி "புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்" என்ற நிகழ்வு ஒன்றை செயல் திறன் அரங்க இயக்கம் இணுவில் மத்திய கல்லூரி நாடகமும் அரங்கியலும் மாணவர்களுடன் இணைந்து நடாத்துகின்றது.

இந் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் காலை 9மணி முதல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது. ஓ

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 11

தண்டனைக்குரிய தவறுக்கு குற்றஞ்சாட்டப்படும் எவரும் குற்றவாளிகள் என காண்பிக்கப்படும் வரை சுத்தவாளிகள் என ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்களாவர்.

## "ஒப்பிலாமணியே" குறும்பட வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்டு ஆசிரியர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் வெளியீடு செய்யப்படும் "ஒப்பிலாமணியே" என்ற குறும்படத்தின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் லயன் மருத்துவர் வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகவும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரை யாளர் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிர மணியம் மதிப்பீட்டுரை நிகழ்த்துவார்.

கலாநிதி த.கலாமணி, ப.தனபாலன், விஷ்ணு, சீலன், முகுந்தன், பிரபாகரன், சிவகுமார், ஞானசக்தி, விக்கினேஸ்வரி, விசாலினி உட்பட பலர் இக் குறும்படத்தில் நடித்துள்ளனர்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இ.கமலநாதன் படத்தை நெறியாள்கை செய்துள்ளார்.

குறும்பட வெளியீட்டு விழாவின் போது படக் காட்சியும் இடம்பெறவுள்ளது. ஓ

## மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடாத்தப்படும் மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் எண்ணிக்கையை இதற்கென வழங்கப்பட்டுள்ள படிவத்தில் பூரணப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

தரம் 3இற்கு 20ரூபாவும் தரம் 4இற்கு 25ரூபாவும், தரம் 5இற்கு 30ரூபாவும், 6, 7 இற்கு 40 ரூபாவும் தரம் 8இற்கு 50 ரூபாவும் ,தரம் 10 இற்கு 70 ரூபாவும், தரம் 11 இற்கு 80 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது. ஓ

## "சங்கிலியன்" நாட்டுக்கூத்து மேடையேற்றமும் நாட்டுக்கூத்துப் போட்டி பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சங்கிலியன் நாட்டுக் கூத்தின் மேடையேற்றமும் நாட்டுக் கூத்துப் போட்டிக்கான பரிசளிப் பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் நடத்தபட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியில் வெற்றியீட்டிய கூத்துக்களுக்கான பரிசளிப்பு இடம்பெறவுள்ளது. இதன் போது முதலிடத்தைப் பெற்ற பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தின் "முத்தா மாணிக்கமா" இரண்டாம் இடத்தைப் பெற்ற நாவாந்துறை சென்மேரிஸ் முத்தமிழ் மன்றத்தின் "விசய மனோகரன்' மூன்றாம் இடத்தைப் பெற்ற குருநகர் புனித யாகப்பர் ஆலய மன்றத்தின் "போர்க்களம்" ஆகிய நாட்டுக்கூத்துக்கள் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நிறைவு நிகழ்வாக பல கிராமங்களையும் சேர்ந்த நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களையும் மூத்த கலைஞர்களையும் இணைத்து திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் சங்கிலியன் நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நீண்ட பல ஆண்டுகளின் பின்பு அண்ணாவிமார்களையும் , மூத்த கலைஞர்களையும் இணைத்து நடிக்கும் கூத்தாக "சங்கிலியன்" அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓ

## தென்னிந்திய திருச்சபையின் யாழ் குருமாவட்ட விழா

தென்னிந்திய திருச்சபையின் 61 ஆவது குரு மாவட்ட விழா இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கிறிஸ்தவ கலை கலாசார மற்றும் தொடர்பாடல் நிலையத்தினால் ஒழுங்கு செய்யபட்ட கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். ஓ

## யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். நகரின் கொமர்ஷல் வங்கிக்கு அருகில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வங்கிக் கிளைகளிலும் மற்றும் காரியாலயங்களிலும் கடமைபுரியும் ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந.சிவரட்ணம் கேட்டுக் கொள்கின்றார். ஓ




## ஓய்வுபெற்ற ஆசிரியர்களை கௌரவித்தல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் , உரும்பிராய், அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து கோப்பாய் அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கத் தீர்மானித்துள்ளது.

எனவே ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தங்கள் விபரங்களை கீழ்வரும் அதிபர்களிடம் உடனடியாக வழங்கி ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் கோப்பாய் லயன்ஸ் கழக இணைப்பாளர் லயன் டாக்டர் வை.தியாகராசா கேட்டுக்கொள்கின்றார்.

பொ.சிவானந்தராஜா -கோப்பாய் மகா வித்தியாலயம்-தொ.இல. 2226535, மு. விக்னேஸ்வரன்-உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்-தொ.இல.2223811, வே. பாலசுப்பிரமணியம்-அச்சுவேலி மகாவித்தியாலயம்-தொ.இல.2223637.

இந்நிகழ்வினை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்த இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

## காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் 2008ஐ முன்னிட்டு காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டியினையும் காரைநகர் பிரதேச எல்லைக்குட்பட்ட திணைக்களங்களிற்கு இடையிலான மென்பந்து, கிரிக்கெற் போட்டி மற்றும் கயிறு இழுத்தல் போட்டியினையும் முன்பள்ளிகளிற்கு இடையிலான விளையாட்டுப் போட்டியினையும் நடாத்த உள்ளது.

பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர் வரும் 22ஆம் திகதியும் மென்பந்து, கிரிக்கெற் மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர் வரும் 15ஆம் திகதியும் ஆகும்.

முன்பள்ளி விளையாட்டுப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி ஆகியன இம் மாதம் 17ஆம் திகதியும் மென்பந்து, கிரிக்கெற் போட்டி இம் மாதம் 22ஆம் திகதியும் நடாத்தப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களில் பொது அறிவுப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் போட்டிக்கான படிவங்களை காரைநகர் பிரதேச சபையில், போட்டிக் கட்டணமாக ரூபா 10/- செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து 22 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக செயலாளர், கரைநகர் பிரதேசசபை, காரைநகர் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

காரைநகர் பிரதேச எல்லைக்குட்பட்ட திணைக்களங்களிற்கு இடையிலான கிரிக்கெற் போட்டி மற்றும் கயிறிழுத்தல் போட்டிகளுக்காக விண்ணப்பிப்போர் பிரதேச சபையில் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி திணைக்களத் தலைவரால் உறுதிபடுத்தி இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும். ஓ

## யாழ்.மாவட்டத்தில் 110 வேலைத் திட்டங்களிற்கென 42.09 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்.மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவில் இவ்வருடத்தில் 110 திட்டங்களினை அமுல்படுத்துவதற்கான தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் "கமநெகும" நிகழ்ச்சித் திட்டத்தில் 42.09 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து கல்வி அபிவிருத்தி, வடிகால் புனரமைப்பு ,நீர் விநியோகம், மின் விநியோகம், கூட்டுறவு அபிவிருத்தி, சனசமூக நிலைய மற்றும் முன்பள்ளி அபிவிருத்தி போன்றவற்றிற்கே இவ்வருடம் கூடியளவு முக்கியத்துவமளிக்கப்படுமென யாழ்.அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி "கமநெகும"நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பிரதேச செயலக ரீதியாக வேலணையில் 12 திட்டங்களும் , காரைநகரில் 2திட்டங்களும் ,யாழ்ப்பாணத்தில் 32 திட்டங்களும், நல்லூரில் 6 திட்டங்களும் உடுவிலில் 9 திட்டங்களும், தெல்லிப்பளையில் 9 திட்டங்களும் , சாவகச்சேரியில் 15திட்டங்களும் ,கரவெட்டியில் 13 திட்டங்களும், பருத்தித்துறையில் 5 திட்டங்களும் மற்றும் மருதங்கேணியில் 3 திட்டங்களுமாக தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் அனுமதிக்களப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ் வேலைத்திட்டங்கள் அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் பிரதேச செயலகங்கள் ஊடாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டுள்ளாா. (5)

# நோத்முதல் கோபல்லவா வரை (122)



**சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் (14.09.1853-09.01.1924)**

எங்கள் அரசியல் தேவைகள் என்னும் தலைப்பில் அவர் பேசிய பேச்சை சேர்.யேம்ஸ் பீரிஸ் வெகுவாகப் பாராட்டி, ***"சேர் அருணா சலம் அவர்கள் பேசிய பின்னரே இலங் கையர் தன்னம்பிக்கையுடன் விடாக் கண்டர்களாக அரசியற் கிளர்ச்சி செய்தல் வேண்டும் என உறுதி கொண்டனர்"*** என்று கூறினார்.

திரு D.S. சேனநாயகவின் தமையனா ரும், திரு R.G. சேனநாயகவின் தகப்பனா ருமாய திரு F.R. சேனநாயக 20.9.1919 இல் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் அரசியல் சமுதாய பொருளாதார அபிவி ருத்திக்கான சங்கங்களைச் ஸ்தாபிப்பதற் காக ஒரு கூட்டங் கூட்டி அதிலே சேர். அருணாசலத்தைப் பேச அழைத்தார். அவர் பேசியதைச் சிங்கள மக்கள் வெகுவாகப் போற்றினார்கள். அருணாசலம் அவர்கள் எல்லா வகையாலும் இலங்கையரை வழி நடத்திப் பொறுப்பு வாய்ந்த உத்தமத் தலை வர் என்று போற்றினார்கள்.

அமெரிக்கா தேசத்துப் பெரியாராய ***கேணல் ஒல்கொட்*** அருணாசலத்தைக் கண்டு பேசி இன்புற்று வரலாற்றைத் தமது நாட்குறிப்பில் எழுதிக்கொண்டார். "இன்று கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டதாரியை ஒருவரைச் சந்தித்தோம். நாங் கள் ஆசியாவில் கண்ட பெரியார்களுள் மிகுந்த அறிவாற்றலும் நாகரிகமும் வாய்ந் தவருள் இவர் ஒருவராவார்" என்பது ஒல்கொட்டின் குறிப்பாகும்.

இலங்கைச் சீர்திருத்த சபைக்கும் அதன் வழி உருவாகிய தேசிய மகாசபைக்கும் அருணாசலமே முதற் பெருந்தலைவராய்த் தெரியப் பெற்றுப் பல காரியங்களை முன்னின்று செய்து முட்டின்றி நிறைவேற் றினார். அவர் தேசிய மகாசபையில் பேசிய பேச்சின் பிரதியொன்று, சீர்திருத்தங் கோரி எழுதிய நினைவேட்டுடன் சேர்த்துக் குடி யேற்ற மந்திரியாருக்கு அனுப்பப்பட்டது. அப்பேச்சினால் இலங்கையர் தமது அரசியல் உறக்கத்தினின்றும் கண்விழித்தமையும், அது இலங்கைச் சரித்திரத்தை மாற்றி அமைக்கும் பெற்றி வாய்ந்ததையும், அது

**மீள் பார்வை**

புதிய சகாப்தத்தை உருவாக்கும் நன்மையது என்பதையும் ஆங்கிலேயர் நன்கறிந்தனர்.

தேசிய மகாசபையின் தலைமையுரை யின் போது இலங்கைக்குக் கனடா, அவுஸ் திரேலியா முதலிய நாடுகளின் கௌரவ அந்தஸ்துக் கொடுக்கப்படல் வேண்டும் என்று பேசிய அருணாசலம் பின்வரும் நடைமுறை களும் அமைதல் வேண்டும் என்னும் பிரேர ணைகளையும் பிரேரித்தார்.

1. சட்டசபை நல்லமுறையில் திருத்தப் படல் வேண்டும்.

2.உள்ளூர் ஆட்சிச் சபைகள் தேச மக்க ளால் தெரியப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப் படல் வேண்டும். அவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்படல் வேண்டும்.

3. மத்திய அரசாங்கம் விதிக்கும் வரிகள் தரப்படுத்தப்பட்டனவாய், மட்டானவையாய் இருத்தல் வேண்டும்.

4. கல்வியின் பொருட்டு மேலதிக பணஞ் செலவிடப்படல் வேண்டும்.(இலங்கையில் 1917 ஆம் ஆண்டின் வருமானத்தில் 5% வீதமே கல்வியின் பொருட்டுச் செலவிடப் பட்டது. அமெரிக்காவின் பரிபாலனத்திலி ருந்த பிலிப்பைன் தீவில் 32% வீதம் செல விடப்பட்டமை எடுத்துக் காட்டப்பட்டது.)

5.பிள்ளைகளுக்கு 14வயது வரை கட்டாய இலவசக் கல்வி இருத்தல் வேண் டும். அதனை அடுத்துத் தொழிற் பயிற்சியும் அளிக்கப்படல் வேண்டும்.

6.இலங்கைக்கு ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

சேர். அருணாசலம் தேச சேவையில் ஈடு பட்டிருந்த காலத்தில் ஏரிக்கரைப் பத்திரிகை களில் ஒன்றான டெயிலி நியூஸ் 3.1.1918 இல் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அதன் முகாமையாளராயிருந்த D.R. விஜயவர்த்தனா அப் பத்திரிகையின் முகப் பை அருணாசலத்தின் கட்டுரை அலங் கரித்தல் வேண்டும் என்று விரும்பினார். அமெரிக்க நாட்டு ஆபிரகாம் லிங்கனைப் போல அருணாசலமும் நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதன் சுருக்கத்தின் சுருக்கம் பின்வருமாறு, "டெயிலி நியூஸ் தக்க தருணத்தில் தோன்றியிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். எங்கள் மத்தியில் புதிய சக்திகள் வேலை செய்யத் தொடங்கியுள் ளன. நாட்டின் ஒரு புதிய சகாப்தம் ஆரம்ப மாகிறது. இந்நாடு தன் பிள்ளைகள் எல்லோ ருடைய விசுவாசம் நிறைந்த தேவைகளை வேண்டி நிற்கிறது"

பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கு வதற்கு அவர் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதோடு நிற்கவில்லை. காலத்துக்குக் காலம் பல சங்கங்களை உருவாக்கி அவற் றிலே தம் கருத்தை வெளியிட்டும் வந்தார். அவர் உருவாக்கி உயிர்ப்பளித்த சங்கங்க ளுள் இலங்கைச் சீர்திருத்த சங்கம், இலங் கைத் தேசிய மகாசபை, சமூகசேவை சங்கம், தொழிலாளர் நலன்புரிச் சங்கம், இலங்கைச் சர்வகலாசாலைச் சங்கம், இலங்கை மகாசனசபை, கொழும்பு சைவபரிபாலன சபை, இலங்கைத் தமிழர் சபை,செந்தமிழ்ப் பரிபாலன சபை என்பன குறிப்பிடத்தகுந்தமை.

***"எங்கள் நாட்டின் அரசியல் புனரமைப் புக்கும்,நாட்டு மக்களின் சமுதமாய முன்னேற் றத்துக்கும் அருணாசலம் அவர்கள் அயராது உழைத்தமை போல, வேறெவரும் அவர் காலத்திலாவது அவருக்கு முந்திய காலத்தி லாவது பணியாற்றவில்லை"*** இவ்வாறு சட்ட சபைத் தலைவராய் இருந்த சேர். ஜேம்ஸ் பீரிஸ் அருணாசலத்தைப் பற்றி எழுதியுள் ளார்.

சேர்.அருணாசலம் பண்பட்ட பண்பி, அவர் நற்பண்புகளின் உறைவிடமாயிருந் தமையோடு, அருங்கலை விநோதராய்ப் பிரபுத் தன்மையோடு வாழ்ந்த பெரியவ ராவர். அதனால் இலங்கையில் கல்வி, கலாசாரம், சமயம், சமுதாய ஒழுங்கு, அரசி யல் மறுமலர்ச்சியடையவும் அவர் அயராது ழைத்தவராகையால் அவை புத்துயீர் பெற்றுப் புனரமைப்புப் பெற்றன என்பர்.


சேர். இராமநாதனைப் போலவே அவரு டைய இளவலான சேர். அருணாசலமும் இணையற்ற தேசியத் தலைவராயிருந்து முழு இலங்கைக்கும் முற்போக்கான அலுவல்

க.சி.குலரத்தினம்

களைச் செய்தார். அவர் இராசாங்க ஆசிய சங்கத்தின் தலைவராயிருந்தும் அளப்பரிய தொண்டு செய்தார். அதன் வெளியீடுகளில் இலங்கையரின் கலாசார சம்பந்தமான கட்டுரைகளைத் தமக்கே உரிய சுத்தமான ஆங்கிலத்தில் எழுதினார். அவற்றைவிட வேறு பல வெளியீடுகளிலும் சிவவழிபாடு, கந்தசாமிக் கடவுள், பத்தினித் தெய்வம் முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி ஆங்கிலேயருக்கு எம் பெருமையை எடுத்துக் காட்டினார்.

சமூக கலாசார சமய சம்பந்தமாக அரிய எழுத்தோவியங்களை எழுதிய அவர், அரசியல் சம்பந்தமாகவும் ,சரித்திரம் சம்பந் தமாகவும், உத்தியோகம் சம்பந்தமாகவும் எண்ணற்ற நூல்களை உருவாக்கியுள் ளார். அழி வழக்குகளின் சட்ட மஞ்சரி, இலங்கைக் குடிசன மதிப்பு அறிக்கை, இலங்கைச் சரித்திரச் சுருக்கம், எங்கள் அரசியல் தேவைகள், எங்கள் அபிலா சைகள் என்பனவும் பிறவும் என்றென்றும் சேர். அருணாசலத்தின் புகழுடம்பாகவே நிலவும் என்பதில் சந்தேகம் இருக்கமாட் டாது. (தொடரும்)

# எமது பாரம்பரிய பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு (7)



எடுத்துக்காட் டாக யாழ்ப்பாண த்தையும் தீவுப் பகுதியையும் இணைக்கும் யாழ்ப்பாண குடா கடலை மேவி அமைக்கப்பட்ட பண்ணைப் பால த்தை அவதானிக் கும்போது, பெருக் கின் போது பாலத் திற்கு மேற்கே கடல் நீர் ஓடி மேற் பகுதி பெருகிக் காணப்படுவதையும் வற்றும் போது கிழக்குப் பகுதி நோக்கி கடல் நீர் வடிந்து வருவதையும் ஒருநாள் பொழுதில் அவதானிக்க முடியும்.

இவ்வாறு கடல் பெருகும் போது கடல் நீரை மறித்துத் தேக்கமாக உருவாக்கி பின்னர் வற்றும்போது சிறிய துருசுகள் மூலம் நீரை வடியவிடும் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். துருசுப் பகுதிகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சுழலி களைப் பொருத்தி விடுவோமாயின் அப்பகு திகளில் இருந்து மின்சக்தியைப் பெற முடியும்.


கடல் அலைச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நுட்பம் சிங்கப்பூரில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடற்பரப்புகள், துறைமுகப் பிரதேசங்களில் மிதக்க விடப்பட் டுள்ள சிறிய மின் உற்பத்திச் சாதனங்கள் அப் பிரதேசத்தின் கடல் பரப்பை ஒளியூட்டிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள் ளது. அலையின் வீச்சில் கடலில் மிதக்கும் மின் உற்பத்தி சாதனத்தின் சுழலி சுழற்பட்டு மின் உற்பத்தி கிடைக்கின்றது.

ஆழ்கடலில் நீரோட்டம் என்பது கடல்நீரில் ஏற்படும் அடர்த்தி மாறுபாட்டால் நிகழ்வது. குளிர்ந்த கடின உப்பு நீர் கீழேயும், வெப்பமான உவர் நீர் மேலேயும் காணப்படுகின்றது. கடல் நீர் பரப்புகளில்,ஆழ்கடல் நீரோட்டங்கள் காணப்படுகின்றன.

கடல் மேல் நீரைக் காற்று அடித்துச் செல்லுமாயின் கீழிருக்கும் குளிர்நீர் வேகமாக மேற்பரப்புக்கு வருகிறது. இந் நிகழ்வு சில கடல் பரப்புகளில் அதிகமாக இடம்பெறுகிறது. பேரு நாட்டின் கடல் பரப்பில் "எல்நினோ" தோன்றுவதற்கு இவ்வாறான கடல் நீரோட்டமே காரணமாக அமைகின்ற தெனத் தெரிகிறது.

எமது பிரதேசத்தில் குறிப்பாக திருகோண மலைக் கடற்பரப்பில் ஆழ்கடல் நீரோட்டம்



கடல் வற்றுப் பெருக்கைப் பயன்படுத்தி சக்தி பெறுதல்

உள்ளமை அவதானிக் கப்பட்டுள்ளது. இவை இன்னமும் நன்கு ஆராயப்படவில்லை. இவை ஆராயப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுமாயின் எமது பிரதேசத்திற்கு சக்தி வழங்கக்கூடிய இலகு வான வழியைக் கண் டறிந்தவர்களாவோம்.


அண்மைக்கால ஆய்வு ஒன்று கடற் துறைகளில் ஆழமற்ற சேற்றுப் பகுதிகளில் "மீத்தேன்"வாயுப் படிவுகள் பெருமளவுக்குப் படிந்துள்ளதாக தெரிவிக்கின்றன. கடலோரங் களில் "மீத்தேன்" வாயுவெளியேறி சில சமயங்களி ல் தீப்பிழம்புகளை உருவாக் குவதை நாம் அறிவோம்.

அதுபோன்று கடற்கரையோரங்களில் மாத்திரமன்றி ஆழமற்ற கடல் அடித்தளங் களிலும் இப்படிவுகள் பெருமளவுக்குப் படிந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட அமுக்க, வெப்ப நிலைகளில் இவை இயங்காமல் உள. இவ் அமுக்க வெப் பங்களில் சில மாறுபாடுகளை உருவாக் குவ தன் மூலம் இவற்றிலிருந்து பெருமளவு "மீத்தேன்" வாயு பெறப்படலாமென அண் மைய ஆய்வு வெளிப்படுத்துகின்றது. மேற்படி வாயு பெறப்படும் வழிமுறை/நுட்பம் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டிடன் தெற்குப் பகுதி கடற்கரையோரங் களில் இதனைப் பெருமளவு பெற்றுக் கொள்ள முடியுமென நம்பலாம்.

### 5.0 புவி வெப்ப சக்தி (Geo Thermal Energy Resource)

எமது பாரம்பரியப் பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச் சக்தி வளங்களின் சூரிய சக்தி, காற்றுச் சக்தி, உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி, கடல்சக்தி என்பவற்றை எவ்வகையில் பயன்படுத்தலாமென்பதைப் பற்றி சென்ற வாரங்களில் வெளிவந்த கட் டுரைகளில் ஆராய்ந்தோம்.

தரைக்கீழ் நிரானது புவியின் உட்பாகத் தில் கொதிக்கும் நிலையிலுள்ள "மக்மா" படையின் வெப்பத்தால் வெப்பமூட்டப்




கடல் அலை ஆற்றலைப் பயன்படுத்தும் காற்று இயந்திரம்

படுவதால் ஏற்படும் சக்தி வெளிப்படையே புவிவெப்ப சக்தி என வழங்குகின்றோம். பெரும்பாலும் இவ்வகைச் சக்தி வெளிப் பாடுகள் எரிமலை வலயங்களிலே காணப் படுகின்றன.

சக்தியை வெளிவிடும் வழி முறையைக் கொண்டு இவற்றை இரு பிரிவாக வகைப்படுத்துவர்.

1.நீராவியை வெளியேற்றும் மையங்கள் (Geyser)

2. வெப்ப நீருற்றுகள் (Hot Springs)

புவியிலுள்ள சில துவாரங்கள் ஊடாக வெப்பநீரும்,நீராவியும் அடிக்கடி வெளி வரும் மையத்தையே Geyser என வழங் குவர். இதனை நீராவியை வெளியேற்றும் மையங்கள் எனத் தமிழில் கூறலாம். புவியின் கீழ் உள்ள பாறை குகைகளில் சிக்கியுள்ள தரைக்கீழ் நீர் மக்மாப்படை வெப்பத்தால் வெப்பமேற்றப்பட, அங்கு வெப்பமும், அமுக்கமும் அதிகரிக்கின் றன.இதனால் குகையை இணைக்கும் துவா ரத்தின் ஊடாக மிகவும் வேகமாக கொதிக் கும் நீராவி வெளியேறுகிறது.

**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**
தலைவர் ,சமூகவியல்துறை
இணைப்பாளர்,புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நீராவி வெளியேற தரைக்கீழ் நீர் குகைக் குள் வருகின்றது. இது மீண்டும் வெப்பம் ஏற்றப்படுகின்றது. இதனால் மீண்டும் நீராவி வெளியேற்றப் படுகிறது.

இவ்வகையான அமைப்பு காணப்படும் பிரதேசங்களில் இந் நிகழ்வு ஒரு சுழற்சி முறையிலே செயற்படுகின்றது. இச் செயற் பாட்டினை புவிவெப்ப-சக்திப் பயன்பாடாக மாற்றி மனிதன் பயன்படுத்த முடியும். 1965 இல் ஐக்கிய அமெரிக்க கலிபோர்னிய மாநிலத்தில் மேற்படி சக்தியை பயன் படுத்தத் தக்க வகையில் வலு வழங் கும் சாதனம் உருவாக்கப்பட்டது.

இதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படு கின்றது. ஐஸ்லாந்து குளிர்கால நிலை நிலவும் நாடாகையால் அங்கு வீடுகள் கட்டிடங்க ளுக்கு வெப்ப மேற்றுவதற்கு புவி வெப்ப சக்தியைப் பெருமளவு பயன்படுத் துகிறார்கள். —(தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

பகுதி A பரீட்சை V நேரம் –40 நிமிடங்கள்

**A** — Answer

1 2,4,6,8,□,□ ______

2 (-6) + (+2) ______

3 x + x + x + x + x ______

4 6 + 8 = 12 + □ ______

5 $81 = 3^{\square}$ ______

6 7000 mg சமன் ______ g

7 1225mℓ இல் பத்திநிடத்து இலக்கம் ______

8 $A\hat{B}D + D\hat{B}C = 90^\circ$
$A\hat{B}D$ இன் நிரப்பி ______

9 $\frac{9 \times 10}{2}$ எத்தனையாம் முக்கோணி எண் ______

10 $3\frac{3}{4}$ ஐ முறைமையில்லாப் பின்னமாக எழுதுக. ______

**B** — Answer

1 இரண்டின் மடங்காக அமையும் எண் கோலத்தின் ஒன்றினிடத்து இலக்கங்கள் யாவற்றையும் எழுதுக. ______

2 (-8)+(-3)+(+4) இன் பெறுமானம் யாது. ______

3 $2x + 3x^2$ இன் பொதுக் காரணியை எழுதுக ______

4 சதுரக்கூம்பகத்திற்கு எத்தனை உச்சிகள் உண்டு. ______

5 <,> என்பவற்றில் பொருத்தமான குறியீட்டை இடைவெளியில் இடுக.
$2^3$ ….. $3^2$ ______

6 ஒரு மெற்றிக் தொன்னில் எத்தனை கிலோகிராம் உண்டு. ______

7 1225mℓ ஐ கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டுக. ______

8 72° இன் மிகை நிரப்பியை எழுதுக. ______

9 10 +6 எத்தனையாம் சதுர எண். ______


10 சுருக்குக் $1\frac{1}{3} + \frac{2}{3}$ ______

**C** — Answer

1 2,4,6,8……. என்ற கோலத்தின் பொது உறுப்பை எழுதுக. ______

2 -3 -2 -1 0 1 2 3
எண்கோலத்தில் காட்டப்பட்ட செய்கையை குறிப்பிடுக. ______


3 சுருக்குக. $4x + 2(3x-1)$ ______

4 
இப்பக்கக்கூர் கூம்பகத்தின் சதுரமுகம் கிடைத்தரையில் வைக்கப்பட்டுள்ளது.
a) செங்குத்தான முகங்கள் எத்தனை உண்டு? ______
b) சாய்வான முகங்கள் எத்தனை உண்டு. ______

5 $(2^2)^3$ இன் பெறுமானம் யாது ______

6 3.6 t இலிருந்து 600 kg ஐ கழிக்க. ______ t

7 மோகனின் நிறையை கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டினால் 30kg ஆக இருந்தது. அவனுடைய நிறையாக இருக்கக்கூடிய முழு எண் பெறுமானங்களை எழுதுக. ______

8 

a இன் பெறுமானம் யாது? ______

9 சதுர எண்கள் நிறை வர்க்க எண்கள் எனவும் அழைக்கப்படும்.

a) 169 ஐ முதன்மை எண்களின் பெருக்கமாக எழுதுக. a)______

b) $\sqrt{169}$ இன் பெறுமானத்தைக் காண்க. b)______


10 ரூ1700 பெறுமதியுடைய கதிரையை அதில் உள்ள சிறிய பழுது காரணமாக $\frac{1}{5}$ பங்கு குறைத்து விற்கப்பட்டது. விற்றவிலை என்ன? ரூ______

**D** — Answer

1 பொது உறுப்பு 7n ஆகவுள்ள எண் தொடரில்
a) 8ம் உறுப்பை எழுதுக.
b) எத்தனையாம் உறுப்பு 105 ஆகும்.
a)______
b)______

2 (-8) – (-2) – (+2) ஐ சுருக்குக.


3 காரணிப்படுத்துக.
$6xy^2 - 3x^2y$

4 
இவ்வுரு இரு சதுரக் கூம்பகங்களை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது.
a) இதன் சிறப்புப்பெயரை எழுதுக.
b) இதற்கு எத்தனை மேற்பரப்புகள் உண்டு
a)______
b)______

5 $2^{-2} \times 2^6$ இன் பெறுமானத்தைக் காண்க

6 ரவி 3kg 500g அரிசியும் 0.01t சீனியும் 1kg 350g கிழங்கும் 3kg 100g மரக்கறியும் கொள்வனவு செய்தால
a) கொள்வனவு செய்த பொருட்களின் மொத்த நிறை எத்தனை kg.இப்பொருட்களை உறையொன்றில் இட்டு நிறுத்த போது 19kg ஆக காணப்பட்டது.உறையின் நிறையைக் காண்க.
a)______
b)______

7 3621485 ஐ கிட்டிய மில்லியனுக்கு மட்டந்தட்டி எழுதுக. ______

8 

உருவில் x இன் பெறுமானத்தைக் காண்க. ______

9 a) எண் ஒன்றின் வர்க்கமூலம் 9 ஆயின் அவ்வெண்ணை எழுதுக.
b) $\sqrt[3]{2744}$ இன் பெறுமானத்தைக் காண்க.
a)______
b)______

10 ஓர் எண்ணை $\frac{1}{5}$ இனால் பெருக்குவதற்குப் பதிலாக அதனை $\frac{1}{5}$ இனால் வகுத்ததன் காரணமாக விடையின் பெறுமானம் 120 ஆக அதிகரித்தது.அவ்வெண் யாது? ______

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு
## க.பொ.த. உயர்தர பரீட்சை 2009
## பாட அலகு ரீதியான விளக்கங்கள்

ரி. பாலசுப்பிரமணியம்

04

## உயிரியல்

### குருதி இழையம்


**ABO – Blood Group**
Land Steaner என்னும் உயிரியலாளரால் ABO குருதிக் கூட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
மனிதர்களில் A,B, AB, O என்னும் நான்கு வகைக் குருதிக்கூட்டம் காணப்படும

| | | | |
|---|---|---|---|
| **A-42%** | **B-9%** | **AB-3%** | **0.46%** |


- செங்குழிய மென்சவ்விலுள்ள agglutinogen /Antigen ஆனது A,B என்னும் இருவகைப்படும்
- குருதி முதலுருவிலுள்ள agglutinin /Antibody ஆனது a,b என்னும் இருவகைப்படும்

**Agglutinogen** அடிப்படையில்
**R.B.C** வகை,


1. **Agglutinogen –A** கொண்டது





2. **Agglutinogen - B** கொண்டது




3. **Agglutinogen – A&B** கொண்டது




4. **Agglutinogen** - எதுவுமில்லை




- **Agglutinogen** உம் **agglutin** உம் பொருந்துகை அடிப்படையிலேயே குருதிக் கூட்டம் தீர்மானிக்கப்படும்.

- **Blood Bank** இல் குருதியைக் களஞ்சியப்படுத்தும் போது கொள்கலன்களில் சோடியம் ஒட்சலேற்று / சோடியம் சித்திரேற்று இடப்படும் காரணம் குருதியில் உள்ள $Ca^{2+}$ வீழ்படிவாக்குவதற்கு
- **Hirudin – Leech** அட்டையின் உமிழ்நீரில் காணபபடும் பதார்த்தம் இது குருதியுறைதலைத் தடுக்கும்

Aggtinogen – A ................ Aggluntinin a உடன் பொருந்துவதில்லை
Aggtinogen – B ................ Aggluntinin b உடன் பொருந்துவதில்லை
ஆகவே **A** ஆனது b உடனும் B ஆனது a உடனும் பொருந்தும்

| Blood Group | Agglutinogen | Agglutinin |
|---|---|---|
| A | A | b |
| B | B | a |
| AB | AB | - |
| O | - | a & b |

**Rhesus factor / RH காரணி**
- Rhesus என்றவகைக் குரங்கில் இருந்து இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமையால் RH காரணி எனப்படுகின்றது.
- செங்குழிய மென்சவ்வில் agglutinogen – D வகை காணப்படுபவர்களில் குருதி $RH^+$ ஆகவும் இல்லாதவர்களில் குருதி $RH^-$ ஆகவும் இருக்கும்.
- *உலக சனத்தொகையில் - 85% $RH^+$, 15% $RH^-$

**குருதி மாற்றீடு / குருதிப்பாய்ச்சல்**
யாதாயினும் ஒரு காரணத்தினால் குருதியை இழந்த/பற்றாக்குறை ஏற்பட்ட ஒருவருக்கு பொருத்தமான குருதியை அவரின் உடலினுள் செலுத்தும் முறை குருதி மாற்றீடு எனப்படும். இவ்வாறு நடைபெறும் போது பெறுபவரின் குருதி ஒருங்கொட்டுதல் கூடாது.

**குருதி இழக்கப்படும் சந்தர்ப்பங்கள்**
- காயங்கள் ஏற்படுவதனால்
- சத்திரசிகிச்சையின் போது
- மாதவிடாய் பெருக்கின் போது
- மகப்பேறின் போது
- கொழுக்கிப் புழு தொற்றுதலின் போது

❖ குருதிச் சோகை, Thalsimia போன்ற நோய் உடையவர்களிற்கு சில சந்தர்ப்பங்களில் குருதி மாற்றீடு மேற்கொள்ளப்படுகின்றது.

❖ இவ்வாறான மாற்றீட்டின் போது குருதியை கொடுப்பவர் வழங்கி (donar) எனவும் குருதியைப் பெறுபவர் வாங்கி (accepter) எனவும் அழைக்கப்படுகின்றார்.

**குருதி மாற்றீட்டின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**


❖ வாங்கியின் குருதி முதலுருவிலே உள்ள agglutinin வழங்கியின் செங்குழிய மென்சவ்விலுள்ள agglutinogen உடன் பொருந்துதல் வேண்டும்.

❖ RH காரணி பொருந்த வேண்டும்.

- உதாரணம்:
A கூட்டம் உடைய ஒருவர் வாங்கியாயின் அவரின் குருதி முதலுருவிலுள்ள **agglutinin (b)** ஆகும். இவ் **(b)** உடன் பொருந்தக் கூடிய aggletinogen A ஐ கொண்ட குருதி/agglutinogen எதுவுமற்ற குருதி O வழங்கப்படலாம்.

| வாங்கி | வாங்கியின் **agglutinin** | வழங்கியின் **agglutinogen** | வழங்கி A |
|---|---|---|---|
| A | b | A/ இல்லை | A,O |
| B | a | B/இல்லை | B,O |
| AB | - | A/B/AB/இல்லை | A,B,AB,O |
| O | a & b | - | O |

- குருதிப்பாய்ச்சுகையில் $RH^+$ உடைய ஒருவருக்கு $RH^+$ உடையகுருதியை எத் தனை தடவையும் வழங்கலாம்.
- அதேபோல $RH^-$ உடைய ஒருவருக்கு $RH^-$ உடைய குருதியை எத்தனை தடவையும் வழங்கலாம்.
- $RH^+$ உடைய ஒருவருக்கு $RH^-$ உடைய குருதியை எத்தனை தடவையும் வழங்கலாம்.
- $RH^-$ உடைய ஒருவருக்கு $RH^+$ குருதியை ஒருதடவைக்கு மேல் வழங்க இயலாது.





* பெற்றோரில் யாராவது. ஒருவர் $RH^+$ உடையவராக இருப்பினும் பிள்ளைகள் அனைவரும் $RH^+$ உடையவராகவே இருப்பர் காரணம் $RH^+$ ஆனது $RH^-$ இற்கு ஆட்சியுடையதாகும்.


❖ ஆண் $RH^+$ குருதியையும் பெண் $RH^-$ குருதியையும் கொண்டிருப்பின் அவர்களின் குழந்தை $RH^+$ குருதியாக இருக்கும் மகப்பேற்றின் போது கருப்பைச் சுவரில் ஏற் படும் வலுவான சுருக்கம் காரணமாக குழந்தையுள்ள $RH^+$ காரணி தாயின் குரு தியை அடைவதனால் தாயின் குருதியில் anti D பிறபொருளெதிரி தோன்றுகின்றது இதனால்.
❖ இத் தாய்க்கு $RH^+$ குருதி வழங்கப்பட்டால் வழங்கப்படும் குருதியில் காணப்படும் RBC தாயின் குருதியில் ஒருங்கொட்டும்.

❖ இரண்டாவது பிள்ளையும் $RH^+$ ஆக இருக்கும் தாயின் குருதியில் காணப்படும் **anti-D** பிறபொருள் எதிரி சூழ்வித்தகத்தினூடாக சிசுவை அடைவதால் ஒருங் கொட்டல் ஏற்பட்டுக் கருச்சிதைவு ஏற்படும் எனவே பெரும்பாலும் இப்பெற்றோருக்கு இரண்டாவது குழந்தை பிறப்பதில்லை.

- குருதியிலே **RBC** குறைவதால் ஏற்படுவது குருதிச்சோகை
- **Vitamin-$B_{12}$** பற்றாக்குறைவானது செங்குழிய முதிர்வைப் பாதிக்கும் இதனால் பாரதூரமான குருதிச்சோகை ஏற்படும்.




முதலாவது குழந்தை பிறந்தபின் 72 மணித்தியாலயத்திற்குள் **Anti-D** என்னும் மருந்து ஊசிமூலம் வழங்கப்படின் **Anti-D** பிறபொருளெதிரி தோன்றாது. தடுக்கப்படும்.




(முற்றும்)

# இலங்கை இனப் பிரச்சினையை தீர்க்க சமாதான வழியில் முயற்சிக்க வேண்டும்

## பலஸ்தீன ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பலஸ்தீன மக்கள் அயல் நாடான இஸ்ரேலுடன் சமாதானமாக வாழ்வது தொடர்பாக நம்பிக்கை கொண்டுள்ளதைப் போன்று இலங்கையில் உள்ள மக்களும் சமாதானத்துடன் வாழ வேண்டும் என பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அபாஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பலஸ்தீன ஜனாதிபதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் மாலை சந்தித்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சமாதானம் பற்றி பேசுகின்ற போது எமது பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களுடன் சமாதானமாக வாழ் வது தொடர்பாக நம்பிக்கை கொண்டுள் ளதைப் போன்று இலங்கை மக்களும் சமா தானத்துடன் வாழ வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கை ஜனாதிபதி சமாதானம் தொடர்பான உணர்வுள்ளவர் என்பது எனக்குத் தெரியும். அந்த வகையில் சமாதானமாக வாழக்கூடிய முறைமையை கண்டடைவதற்கும் அவர் முயற்சிக்கின்றார்.

இந்த நாட்டில் உள்ள பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும் என்பது குறித்து சுட்டிக் காட்டியுள் ளேன்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகவியலாளருக்கு கருத்துத்தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பலஸ்தீனர்களின் பிரிக்கப்படமுடியாத உரிமைகளையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் தீர்மானத்திற்கு அமைவாக சுதந்திர இறைமையுள்ள தனி நாட்டையும் நாம் தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளோம்.

பலஸ்தீன மக்களுக்கு சமாதானம் கிட்ட வேண்டும் என நாம் வாழ்த்துகின்றோம். ஓ

# கம்போஜியாவிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு ஆயுதக் கப்பல் - சிங்கள இணையத்தளம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப் பல் ஒன்று கம்போஜியாவில் இருந்து புறப்பட்டுள்ளதாக இராணுவப் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி பிரபல சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மினி மல்டி பெரல்கள் மற்றும் தோட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் இந்தக் கப்பலில் கொண்டுவரப்படு வதாக தெரிவிக்கப்படுகிறது.

நிதித்தட்டுப்பாடு காரணமாக தவணைக் கட்டண முறையில் இந்த ஆயுத கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது.

இந்த கொடுக்கல் வாங்கல்களிற்காக ஐரோப்பாவைச் சேர்ந்த புலிகளின் நிதிப் பொறுப்பாளர் ஒருவர் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். கம்போஜியாவிலிருந்து புறப்பட்ட குறித்த ஆயுதக்கப்பல் இடைநடுவில் வேறும் ஓர் கப்பலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்த ஆயுத கடத்தல் தொடர்பில் குறித்த நாடுகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் பல ஆயுதக்கப்பல்கள் படையினரால் மூழ்கடிக்கப்பட்டுள்ளதா அந்த இணையத்தளம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. ஓ

# ஐ.தே.க.வின் வடமத்திய மாகாணசபை வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள்

(கொழும்பு)

வடமத்திய மாகாணசபையில் ஏற்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் பதவி வெற்றிடங்களுக்காக பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விருப்பு வாக்குகள் அடிப்படையில் அடுத்த நிலைகளை பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி அநுராதபுரத்தில் கட்சிக் காரியாலத் திறப்பு விழாவின் போது இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் மூன்று மாகாண சபை உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். மேஜர் ஜெனரல் ஜானகப்பெரேரா, சுனில் திஸாநாயக்க மற்றும் எம். அனுர்தீன் ஆகி யோர் இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இதன் காரணமாக ஏற்பட்ட உறுப்பினர் பதவி வெற்றிடங்களுக்காக முறையே கே. பி.தென்னக்கோன்,ரோஹன கமகே மற்றும் அனுர புத்திக்க குணசேகர ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர். குறித்த ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் களின் பெயர்களை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஓ

# 15 வயது சிங்கள சிறுவனே ஜானக பெரேராவின் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளான்

## எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் படுகொலைக்கு 15வயது மதிக்கத்தக்க கால்கள் பின்னிப் பிணைந்த சிங்கள சிறுவனே பயன்படுத்தப்பட்டுள்ளான். நடக்க முடியாத இந்தச் சிறுவன் வாகனத்தில் கொண்டு வரப்பட்டே இறக்கப்பட்டுள்ளான். என்ற புதிய சந்தேகம் தற்போது கிளம்பியுள்ளது. என்று ஐ.தே.க வின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 2000ஆம் ஆண்டு புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட இராணுவதினரைக் காப்பாற்றுவதற்கு எந்தவொரு உயர் படையதிகாரியும் முன்வராத தருணத்தில் தைரியமாக முன் வந்தவர் ஜானக பெரேரா ஆவார். இன்று அவரது பூதவுடலுக்கும் அவமரியாதையளிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே எஸ் .பி மேற் கண்டவாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது.

கடந்த 6ஆம் திகதி அனுராதபுரத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக பல் வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவையனைத்தும் நியாயமான சந்தேகங்களாகும்.

குண்டை வெடிக்கச் செய்தவன் 15 வயது மதிக்கத்தக்க கால்கள் பின்னிப்பிணைந்து மிகவும் சிரமப்பட்டு நடக்க முடியாதவன் என்றும் தனது சட்டைப்பையிலிருந்த குண்டையே வெடிக்கச் செய்தான் எனவும் அவன் ஒரு சிங்களச் சிறுவன் என்றும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறானால் அதியுயர் பாதுகாப்பு பிரதேசமான அனுராதபுர நகரில் இச் சிறுவன் எவ்வாறு சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு கொண்டு வரப்பட்டான். அவனைக் கொண்டு வந்த வாகனம் வீதிச் சோதனைச் சாவடிகளில் சோதனையிடப் படவில்லையா?

யாரால் நிகழ்ச்சி இடம் பெறும் இடத்திற்கு கொண்டு வந்து விடப்பட்டான் ஏன் .இதுவரையில் பொலிஸார் அவ் வாகனத்தைக் கண்டு பிடிக்கவில்லை என்ற சந்தேகங்கள் எழுகின்றன. அத்தோடு குண்டு வெடிப்பு இடம் பெற்றதற்கு முதல் நாள் அநுராதபுர நகரில் படையினர் சல்லடை போட்டுத் தேடுதல்களை நடத்தினர்.

இவ்வாறான தொரு பாதுகாப்புக் கெடுபிடிகள் நடத்தப்பட்டு அடுத்த தினத்தில் இவ்வாறனதொரு குண்டு வெடிப்பு எவ்வாறு இடம் பெற்றதென்பதும் சந்தேகசத்தை எழுப்புகின்றது.

இராணுவத் தளபதியும் உயர் அதிகாரிகளும் அங்கு வருவதாலேயே இவ்வாறான தொரு பாதுகாப்புச் சோதனைகள் இடம் பெற்றுள்ளன. இந்த பாதுகாப்புச் சோதனைகளின் போது நீண்ட தூரம் வேகமாக நடக்க முடியாத இச் சிறுவனை படையினர் காணவில்லையா?

ஜோன் புள்ளேயின் வீடு தீயிட்டு எரிக் கப்பட்டதற்கு எதிராக சாட்சி யங்கள் உள்ளன. அவரும் உயர் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்திருந்தார். இச் சம்வத்துடன் அமைச்சர் ஒருவரும் தொடர்பு பட்டிருந்தார். இவை யெல்லாம் உயர் நீதிமன்றில் அம்பலமாகி யிருந்தது . அரசாங்கம் தற்போது உயர் நீதி மன்றத்தைக் கண்டு நடுங்கத் தொடங்கியுள்ளது. எனவே டாக்டர் ஜோன் புள்ளேயை இலக்கு வைத்து இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் நீதியையும் உண்மையும் மறைப்பதற்கே இச்சம்பவத்தை மேற்கொண்டிருக்கலாமென்ற சந்தேகமும் எழுகின்றது. அதேபோன்று வெலிய முன வின் தாக்குதல் தொடர்பிலும் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்த சட்டத்தரணி வெலியமுனவின் கொலை முயற்சிக்கும், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, ஜோன் புள்ளே உட்பட மக்களின் கொலைகளுக்குப் பின்னணியிலும் அரசாங்கம் மற்றும் அரசுடன் சார்பானவர்களே பொறுப்பாகும்.

இலங்கையில் தோன்றி வரும் புதிய அரச பயங்கரவாதத்தை இல்லா தொழிக்க ஒன்றிணைவோம் . உண்மையான குண்டுதாரியாரென்பதை வெளிப்படுத்துவோம் என்றார். ஓ

# இலவச மருத்துவ முகாம்

யாழ்.லயன்ஸ் கழகம் நடாத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக் கிழமை காலை 10 மணி முதல் பி.ப 1 மணி வரை அராலி வீதியில் அமைந்துள்ள அமைந்துள்ள மலரும் மெட்டுக்கள் முன்பள்ளியில் நடத்தவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் சகல நோய்களுக்குமான மருத்துவம், இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண்ணாடி வழங்கல் என்பன நடைபெறவுள்ளதால் அனைத்து கிராம மக்களையும் கலந்து பயன்பெறுமாறு யாழ்.ல்யன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் ப.செந்தில்செல்வன் கேட்டுக்கொள்கிறார். ஓ

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எம்.ஜி. ஆர்.உயிரோடு இருந்திருந்தால்

## எப்போதோ எட்டியிருக்கும்-விஜயகாந்

(சென்னை)

எம்.ஜி. ஆர் உயிரோடு இருந்திருந்தால் எப்போதோ ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டிருக்கும். ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் சடங்குகளை நடத்திக் கொண்டிருக்காமல் முதலமைச்சர் கருணாநிதி நேரடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி நடக்கவுள்ள இளைஞர் அணி மாநாட்டின் அழைப்பிதழை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி அண்மையில் கோயம்பேடு தே. மு.தி.க., தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், ஈழத் தமிழர்கள் தமது நாட்டில் அமைதியாக வாழ வேண்டும். மத்திய அமைச்சர்களாக உள்ளவர்களால் தீர்க்க முடியாத பிரச்சினையை தந்திகள் மூலமாக தீர்க்க முடியும் என்று கூறுவது க்ண் துடைப்பு நாடகம். ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமருக்கு கடிதம் எழுதினேன். தந்தி அனுப்பினேன் தொலை பேசியில் பேசினேன் என்று முதல்வர் கூறு கிறார். நேரடி நடவடிக்கை கள் எடுக்காமல் முதல்வர் இது போன்ற சடங்குகளை மட்டுமே கையாள்கிறார்.



கடந்த 1956 ஆம் ஆண்டு முதல் ஈழத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடி வருவதாக முதல்வர் கருணாநிதி கூறுகிறார்.

ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை சாவு எண்ணிக்கை அங்கு கூடியுள்ளதே தவிர குறைய வில்லை.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதும் தொடர்கிறது. எனச் சுட்டிக்காட்டியுள்ளார். ஓ

# அமெரிக்கத் தூதரகம் நடத்தும் ஒளிப்படக் காட்சிப் போட்டி

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தினால் இலங்கையர்களுக்காக ஒளிப்படக் காட்சியொன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயகம் என்பது?...என்ற தொனிப்பொருளில் மூன்று நிமிடங்களுக்கு கூடாத வகையில் வீடியோ காட்சிகளை இந்தப் போட்டிக்காக அனுப்பிவைக்க முடியும் விவரணமாகவோ, படமாகவோ, பாடலாகவோ, சலனப்படமாகவோ அல்லது வேறும் ஏதேனும் ஒரு கதை கூறும் உத்தியின் மூலம் ஜனநாயகம் என்பது?... என்ற கருப்பொருளை மையமாக வைத்து உருவாக்கப்படும் படைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. இவ்வாறு போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் படங்களில் சிறந்த மூன்று படைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச போட்டிகளுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சர்வதேச ரீதியில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் பின்னர் யுடியூப் இணையத் தளத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஓ

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லையாயினும், அவன் பையைக் கிழிக்காமல் விட்டால் போதும். – அயர்லாந்து

வலம்புரி

# பாடசாலைகளின் அபிவிருத்தியில் அதிகூடிய கவனமெடுத்தல் வேண்டும்

கல்வித் திட்டத்தில் எத்தனை மாற்றங்கள் கொண்டுவந்தாலும் பிரபல்யமான பாடசாலைகள், பின்தங்கிய பாடசாலைகள் என்ற வேறுபாட்டு நிலைகள் கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்த மாட்டாதென்பது உணர்தல் வேண்டும்.

இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகம் செய்த சி.டபிள்யூ.கன்னங்கராவின் சிந்தனை இப்போது தோல்வி கண்டுள்ளதென்றே கூறவேண்டும்.

அதாவது இலவசக் கல்வியின் முழுப்பலனையும் வசதி படைத்த மாணவர்களே அனுபவிக்கின்றனர். குறிப்பாக பிரபல்யமான பாடசாலைகள், திறமையானவர்களும், வசதி படைத்தவர்களுமான மாணவர்களைத் தெரிவு செய்து கொள்கின்றன.

இத்தகைய மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்திக்கு பெருந்தொகையான அன்பளிப்புக்களை வழங்கும்போது குறித்த பாடசாலையின் பௌதிக மற்றும் இதர வளங்கள் அதிகரிக்கின்றன.

அதேநேரம் சமூக, பொருளாதார, அரசியல் செல்வாக்கின் நிமிர்த்தம் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற வளங்களும் இத்தகைய பிரபல்யமான பாடசாலைகளை நோக்கியே நகர்த்தப்படுகின்றன.

இதனால் இலவசக் கல்விக்கான வளத்திரட்சியையும் –தனியார் பாடசாலைகளுக்குரிய அன்பளிப்புத் தொகைகளையும் பெற்றுக் கொண்டு குறித்த பாடசாலைகள் கொடிகட்டிப் பறக்கின்றன.

அதேநேரம் பின்தங்கிய பாடசாலைகள் அரச உதவிகள் எதுவுமின்றி வறிய மாணவர்களை தாங்கிக் கொண்டு எதுவுமே செய்ய முடியாமல் தத்தளிக்கின்றன.

போதாக்குறைக்கு இப்பாடசாலை ஆசிரியர்களும் வெறுப்படைந்து தமது கடமைகளை மறக்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இலங்கையில் இலவசக் கல்வியின் நன்மைகள் சீரற்ற –ஒழுங்கற்ற திட்டமிடல்களால் ஒரு பகுதியில் குவிந்துபோக, ஏனைய பாடசாலைகள் வறிய மாணவர்களை வகுப்புயர்த்தும் பணியை மட்டும் செய்து கொண்டிருக்கின்றன.

எனவே நாட்டில் தற்போது முதலாந்தரத்திலும், ஆறாம் தரத்திலும் பாடசாலை அனுமதிக்காக எழுந்துள்ள மாபெரும் போட்டியையும் அந்தப் போட்டியில் செல்வந்தர்களும், செல்வாக்கு மிக்கவர்களும் வெற்றி பெறுவதைத் தவிர்த்து எல்லா மாணவர்களும் தரமான பாடசாலையில் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கான ஒரே வழி பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதாகும்.

சிறிய பாடசாலைகளைப் பெரிய பாடசாலைகளுடன் இணைத்து அவற்றின் பௌதிக மற்றும் ஏனைய வளங்களைப் பெருக்குதல் அவசியமாகும்.

அப்போதுதான் பாடசாலை ரீதியான போட்டிகளும், அனுமதிப்போட்டிகளும் குறைவடையும்.

# சங்கடங்கள் தீரச் சனீஸ்வர பகவானை வழிபடுவோம்



நீர்வை மணி

சைவசமயிகள் பெருமையுடன் போற்றிடும் புராண வரலாறுகளில் ஈஸ்வரப் பெருமையுடன் வழிபடப்படுவர் கணேசர், குமரேசர், சண்டேஸ்வரர், நடேசர், சர்வேஸ்வரர், இராவணேஸ்வரர், சனீஸ்வரர் குறிப்பிடத்தக்கவராவர். இந்த ஈஸ்வரர்களில் சனீஸ்வர வழிபாடு தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது.

ஈசன் என்றால் எமக்கெல்லாம் முழுமுதலானவராக வழிகாட்டியாக விளங்கும் பார்வதி பரமேஸ்வரனாக திகழும் சிவபிரானையே குறிப்பதாகும். நவக்கிரகங்களுள் நீதி வழுவாது செயற்படுபவராக சனீஸ்வரப்பெருமான் விளங்குவதால் தனிச்சிறப்புடன் வழிபடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

காகத்தை வாகனமாகக்கொண்ட சனீஸ்வர பகவான் சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவன். சனி பிறந்துவிட்டதை அறிந்து சூரியன் தனதுதேர்ப்பாகன் சூதனுடன் பார்க்க வந்ததும் சனியின் பார்வையால் சூரியன் குஷ்டரோகியாகவும் சூதன் கால்முடமாகியும் விட்டதாகவும் இதனால் சோதிட சாஸ்த்திரத்திலும் சூரியனுக்கும் சனிக்கிரகத்திற்கும் பிறவிப் பகை எனவும், சூரியன்- சனிக்கிரகப் பார்வைகளும், சூரிய திசையில் சனி புத்தியும் கேடுகளை விளைவிக்கும் எனவும் கூறுவார்கள்.

இத்தகைய சனிஸ்வரன் சிவ பக்தியில் சிறந்தவன் ஆதலால்தான் ஈஸ்வரப்பதவியைப்பெற்றான். நவக்கிரகங்களுள் எல்லாம் நன்மை,தீமைகளை மாறி மாறி வழங்குபவன் ஆயினும் சனி பகவான் மட்டுமே மக்களின் நன்மை தீமைகளை சீர்தூக்கிப்பார்த்து தராசு முனையில் நிறுத்து போல நடு நின்று பலன்களை நன்றோ தீதோ வழங்கிவிடுகின்றான்.

இதனால்தான் மக்களும் மற்றைய கிரகங்களை விட சனிஸ்வரனுக்கு பயப்படுகின்றார்கள் எனலாம்.

## சிவ வழிபாடும் குரு பார்வையும்

சனீஸ்வரன் விஸ்வகர்மாவின் மகளை திருமணம் முடித்தும் -அவளைப் புறக்கணித்து வாழ்ந்ததால் சனீஸ்வரன் பார்க்கும் பொருட்கள் கருகி விட வேண்டும் என அவள் சபித்தாள்.

இந்த சாபம் நீங்க வேண்டும் என சிவபெருமானிடம் சனி வேண்டுதல் செய்யவும் குரு பார்வையினாலும், சூரிய வழிபாடு, சிவ வழிபாடுகளினாலும் விமோசனம் கிடைக்கும் என இறைவன் அருளினார்.

இதனால்தான் ஏழரைச் சனி, அட்டமத்துச்சனி, ஜென்மச் சனி எனச் சனிக்கிரகம் மாற்றங்களால் துன்பப்படுபவர்கள் சிவ வழிபாட்டிலும் , சூரிய வழிபாட்டிலும், குருவழிபாட்டிலும்,நந்திதேவருக்கு தண்ணீர் வார்த்து குளிர் வித்தும் வழிபாடுகள் செய்து தமது துன்பங்களுக்கு நிவர்த்தி தேடிக் கொள்கின்றனர்.

சூரிய புத்திரனாகிய சனிபகவான் ஆனானப்பட்ட சிவனையும் , சக்தியையுமே ஆட்டிப்படைத்தவன் சிவ பிரானை கறைக்கண்டனாகவும், பிட்சாடனராகவும், சுடலையாடியாகவும்,தக்கன்யாகத்தைக்கெடுத்து உலகமாகாசக்தியையே ஆட்டி வைத்து தன் வல்லமைமைய உலக்கு உணர வைத்தவனாவான்.

மேலும் விநாயகர் யானைத்தலையைப் பெறவும், இராவனன் வீழ்ச்சியுறவும், இராமன் காடு செல்லவும் , பாண்டவர் வனவாசம் செல்லவும், பிரமன் சிறைப்படவும், எமன் உதைபடவும், நளமகாராசன், அரிச்சந்திர மகாராசன் பட்ட துன்பங்களே யாவும் சனீஸ்வரன் பார்வையால் அன்றோ மிக்க சக்தி கொண்டவனான சனீஸ்வர பகவானை வெற்றிகொள்ளக் கூடிய மகாசக்தியாகிய மகேஸ்வர சக்தி ஒன்றே தான்.

ஆனானப்பட்ட ஆட்சிபீடத்தில் உள்ளோர் முதல் பேரறிவாளர்கள், பெருவல்லமை படைத்தோரையும் சனி பகவான் தன் பார்வையால் கெடுப்பதும், வல்லமையற்றோர் பலரையும் தன் பார்வையால் நொடிப்பொழுதில் உயர்த்தி விடுவதும் அனுபவரீதியாக நாம் காணவும் அறியவும் முடிகின்றது.

எனவே ஈஸ்வரப் பதவி கொண்ட சனீஸ்வரப் பெருமானை புரட்டாதி சனி வாரங்களில் வழிபட்டு தான் தனியே உண்ணாது தன் குலத்தை கூவி அழைத்து ஒன்று கூடி உண்ணும் காக்கைக்கூட்டத்தினை அழைத்து அவற்றுக்கு முதலில் உணவு இட்டு பின்பு உணவு உண்டு விரதம் நோற்பதும் சனிக்கிழமை நோன்பு வழிபாட்டின் தனிச் சிறப்பாகும்.

# ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவின் அறிக்கையால் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம்

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வரைபு அறிக்கை உண்மைக்கு புறம்பானது என்றும், ஆதாரமற்ற உள்ளடக்கங்களை கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ள அரசாங்கம் ஐரோப்பிய பாராளுமன்றக்குழு இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயன்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தூதுக்குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பக்கச் சார்பான அறிக்கை எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய பாராளுமன்ற தூதுக்குழுவினர் தெரிவித்த கருத்துக்கள் இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தயாரித்துள்ள வரைபு அறிக்கை தொடர்பில் பதிலளிக்கும் வகையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத்தூதுவர் ரவிந்த ஆரியசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை தொடர்பாக ஐரோப்பிய பாராளுமன்ற தூதுக்குழு தயாரித்த வரைபு அறிக்கை முற்றிலும் பொய்யான உள்ளடக்கங்களை கொண்டது. எவ்வித ஆதாரமும் அற்றது.

எதிர்வரும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தேர்தலில் சாதகமான பெறுபேறுகளை பெறும் நோக்கில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவுமே இந்த அறிக்கை அமைந்துள்ளது.

இவ்வறிக்கை இலங்கை அரசாங்கம் உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்புடன் யுத்தம் நடத்தி வருகின்றமையை கருத்தில் கொள்ளும் அதே வேளை அரசாங்கத்திற்கு எதிராகவும் பக்கச் சார்பானதாகவும் அமைந்துள்ளது. இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான வலுவான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கொழும்பில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தூதுக்குழு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் , வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கடும் கண்டனம் தெரிவிக்குமாறு அரசாங்கம் எனக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஓ)

# தேசிய பிரச்சினை தீர்வுக்கு புலம் பெயர் இலங்கையரின் ஒத்துழைப்பு அவசியம்

(கொழும்பு)

தீர்மானமிக்கதோர் கட்டத்தை எட்டியிருக்கும் இலங்கையின் தேசியப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை எட்டுவதற்கு புலம் பெயர் இலங்கையரின் ஒத்துழைப்பு மிகவும் அவசிமானது என வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் பாலித கோஹன குறிப்பிட்டுள்ளார்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் சமாதானத்தை எட்டுவதே முதன்மையாக கருதப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.


படையினர் வெற்றிகரமாக முன்னகர்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் ஜனநாயகத்தை மீண்டும் நிலை நிறுத்துவதில் அரசாங்கம் அதிக கரிசனை காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளின் ஊடாக அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட்டு அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளி விவகார அமைச்சு செயலாளர் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் சமாதானத் திட்டத்திற்கும் அரசாங் கத்திற்கும் ஆதரவு வழங்க வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## நம் நடத்தையை மாற்றுவது எப்படி?



நீங்கள் ஒருவரது உண்மையான குணத்தை அறிய விரும்பினால் அவரது மகத்தான காரியங்களைப் பார்த்து முடிவுக்கு வராதீர்கள். முட்டாள் கூட எப்போதாவது சில நேரங்களில் மகத்தான மனிதனாக முடியும். ஒருவன் மிக மிகச் சாதாரண செயல்களைச் செய்யும் போது கவனியுங்கள். அவையே அவனது உண்மையான குணத்தைத் தெரிவிப்பவை. சில குறிப்பிட்ட நேரங்கள் மிகச் சாதாரண மனிதர்களைக் கூட ஒரு வகையான மகத்தான நிலைக்கு உயர்த்திவிடும் . எந்தச் சூழ் நிலையிலும் யாருடைய குணம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்.


உலகில் நாம் காண்கின்ற எல்லா செயல்களும்; சமுதாயத்தின் எல்லா இயக்கங்களும் நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அத்தனையும் வெறும் எண்ணங்களின் வெளித் தோற்றமே ; மனித சங்கல்பத்தின் (Will) வெளிப்பாடுகளே. எந்திரங்கள், கருவிகள், நகரங்கள், கப்பல்கள், போர்க் கப்பல்கள் இவையெல்லாமே மனிதனது சங்கல்பத்தின் வெளிப்பாடுகளே. இந்தச் சங்கல்பம் குணத்தால் அமைகிறது; குணமோ செயல்களால் உருவாக்கப்படுகிறது. செயல் எத்தகையதோ அத்தகையதே சங்கல்பத்தின் வெளிப்பாடும். உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள உறுதி வாய்ந்த சங்கல்பம் கொண்டவர்கள் எல்லோரும் மாபெரும் செயல் வீரர்களாகவே இருந்திருக்கிறார்கள். காலங்காலமாகத் தொடர்ந்து செய்து வந்த செயல்களின் மூலம் பெற்ற ஆற்றல் வாய்ந்த தங்கள் சங்கல்பத்தால் உலகையே மாற்றி அமைக்க வல்ல மாபெரும் மனிதர்களாக இருந்தார்கள் அவர்கள்.

# சேதனச் சேர்க்கையாகும் கற்பகதரு

"கற்பகதரு" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற பனையானது யாழ். மண்ணில் முக்கிய வளங்களுள் ஒன்றாகும். அந்நிய ஆட்சியும் அந்நிய கலாசாரமும் இம் மண்ணில் வேரூன்றுவதற்கு முன் நமது மூதாதையர் தமது அடிப்படைத் தேவைகளில் பெரும்பாலானவற்றை பனையிலிருந்து பெறப்பட்ட உற்பத்தியிலிருந்தே பூர்த்தி செய்து வந்தனர். ஆயினும் காலப்போக்கில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் பனையின் முக்கியத்துவத்தை பின்தள்ளி விட்டன. பனம் உணவுப் பொருட்களும் பிற பனம் உற்பத்திகளும் இழிபொருட்களாக் கப்பட்டன. பனை மரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்பட்டன. ஆயினும் கால மாற்றமும் எம் மீது சுமத்தப்பட்ட பல்வேறு நெருக்கடிகளும் நமது பாரம்பரிய வளமான பனையைப் பேணவும் அதைப் பயன்படுத்தவும் வேண்டிய விழிப்புணர்வை நம்மிடையே ஏற்படுத்தியுள்ளன. இன்று இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களுக்கு பதிலீடாக பனையிலிருந்து கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களை மக்கள் விருப்புடன் நுகரத் தொடங்கியமை இதனை வெளிப்படுத்துகிறது. பனையிலிருந்து கிடைக்கக் கூடிய சேதனச் சேர்வைகளாவன சேதனப் பசளையாகப் பனை ஓலை உயிர் வாயு மற்றும் வடிசாலைக்கழிவிலிருந்து சேதனப் பசளை ஆகியனவாகும்.

**சேதனப் பசளையாகப் பனை ஓலை**

இற்றைக்கு 40-50 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தின் வீடுகள் பல பனம் ஓலையினால் வேயப்பட்டிருந்தன. கல்வீடுகளில் கூட குசினிகள் பனம் ஓலையால் வேயப்பட்டிருந்தன.



விவசாய நடவடிக்கைகளுக்கென புகையிலை வைக்க, வெங்காயம், பனங்கட்டி போன்ற விவசாயப் பொருட்களை களஞ்சியப்படுத்த ஓலையால் வேய்ந்த கொட்டில்களே அமைக்கப்பட்டிருந்தன. இக் கொட்டில்கள் 2 வருடங்களுக்கொரு முறை பழைய ஓலையைப் அகற்றி விட்டு புதிய ஓலையால் வேயவேண்டும். அவ்வாறு வேயும்போது அகற்றும் ஓலையினை வெட்டியெடுத்து தோட்டங்களின் நிலங்களில் புதைப்பார்கள். இவ்வாறு புதைக்கப்படும் ஓலைகள் இலகு வில் நிலத்தின் கீழ் உக்கி சேதனப் பசளையாக மாறுகின்றது. ஏற்கனவே மழையிலும் வெய்யிலிலும் மாறி மாறி கூரையின் மேல் இருந்ததன் காரணமாக இறந்திருந்த ஓலையானது நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டதும் விரைவில் சேதனமாக மாறிவிடுகின்றது. புதிய ஓலைகளைக் கூட சிலர் தோட்டங்களுக்கு வெட்டிப் புதைப்பார்கள். ஆனால் இது உக்குவதற்கு சில காலம் செல்லும். குறிப்பாக ஓலைகளை புகையிலைத் தோட்டங்களிலும் மரக்கறி தோட்டங்களிலும் புதைத்து கூடிய விளைச்சலைப் பெறுகின்றார்கள். முன்பெல்லாம் இயற்கையோடு இணைந்து சேதனப் பசளைகளையே பாவித்து செயற்கைப் பசளையின் தாக்கத்திலிருந்து விடுபட்டிருந்தனர். தற்போது இந் நடைமுறையானது பெருமளவில் மாறி விட்டது. பெரும்பாலும் கூரைகள் யாவும் ஓடுகளாலும் அஸ்பெஸ்டஸ் தகடுகளினாலும் வேயப் பட்டிருப்பதால் ஓலைப் பாவனை அறவே தடைப்பட்டுவிட்டது.

**உயிர்வாயு உற்பத்தியில்**

வடிசாலையில் மதுசாரத்தை வடித்த பின் வெளியேறும் கழிவில் பலவிதமான உயிர்ப்புள்ள சேதன சேர்க்கைகள் இருப்பதால் இக் கழிவிலிருந்து உயிர் வாயுவைப் பெற்று வடிசாலையின் பல தேவைகளை பூர்த்தி செய்யமுடியும். குறிப்பாக வடிசாலையை இயக்கக் கூடிய மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தற்போது இக் கழிவுகள் வீணே நிலத்தில் ஊற்றப்படுகின்றன.

உயிர்வாயுவை உற்பத்தி செய்யும் அமைப்புகளை தோற்றுவிக்கும் செலவானது இதிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை விட மலிதானதே. பனை அபிவிருத்தி சபை போன்ற அமைப்புகள் இதனை முன்னின்று செய்து காட்டின் இவ் வடிசாலைகள் இவற்றைப் பின்பற்றும் எந்த வகையானாலும் தொழிற்சாலைகளிலும் உள்ளக சிக்கனத் தைப் பேணவேண்டுமளவிருந்தால் மீதமாகும் கழிவுகளைப் பயன்படுத்தி அழிவிலிருந்து பயன்களைப் பெறவேண்டும் அவை உற்பத்தி செலவுகளைக் குறைக்க உதவுகின்றன.

**வடிசாலை கழிவிலிருந்து சேதனப் பசளை**

கள்ளானது 5% மதுசாரமும் மிகுதி 95% ஏனைய நுண்ணிய தாதுப்பொருட்களுடன் சேர்ந்த திரவமாகவும் காணப்படுகிறது. இதன் காரணமாக வடிசாலைக் கழிவானது சிறந்த கனியுப்புக்களுடன் சேர்ந்த சேதனப் பசளையாகக் கிடைக்கின்றது.

இக்கழிவினை திரவ உருவில் பாவிக்காமல் அதில் வேறுவிதமான சேதனப் பொருட்களையிட்டு உக்கவிடுவதன் மூலம் குறிப்பாக பனம் ஓலை, பனம் தும்பு,தூசுகள் போன்றவற்றையிட்டு அதனுள் இப் பொருட்களை இலகுவில் சேதனமாக்கக் கூடிய பக்றீரியாக்களை சேர்த்து விரைவான சேதன விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வேளையிலேயே உயிர்வாயுவைப் பெற்றுக்கொள்ளமுடியும். உயிர்வாயு பெற்ற பின்பு பெறப்படும் கழிவினை சிறந்த சேதனப் பசளையாக பாவிக்கமுடியம். தற்போது இக் கழிவில் எதுவித மாற்றமும் செய்யாமல் விவசாயிகள் தங்கள் வயலில் நேரடியாக ஊற்றுவதன் மூலம் அதிக விளைச்சலைப் பெறுகின்றனர். இதில் கூடுதலான நைதரசன் காணப்படுவதால் இது சிறந்த சேதனப் பசளையாகக் காணப்படுகின்றது.

**வி.சுமதினி**
இறுதி வருடம்
தகவல் தொடர்பு மையம்
விவசாயபீடம்.

இக்கழிவானது வடிசாலைகளுக்கு ஒரு பாரிய தொல்லையாக இருக்கிறது. இக்கழிவினை செலவுசெய்து வெளியே கொண்டு சென்று தனியாருக்கு சொந்தமான நிலங்களில் ஊற்றவேண்டியுள்ளது. இது வடிசாலைக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. இதனை உயிர் வாயுவாகவும் பின்னர் சேதனப் பசளையாகவும் மாற்றி அதனையும் பணமாக மாற்றிக்கொண்டால் சாராயத்தின் உற்பத்தி செலவினை மேலும் குறைத்துக் கொள்ள முடியும்.

# அருகிவரும் வாசிப்பும் தடுக்கி விழும் மாணவர் சமுதாயமும்



மானிடத்தை நெறிப்படுத்தி மனித வாழ்வை வலுவுடையதாக மாற்றுவது கல்வி. இக்கல்வியில் அடிநாதமாக அமைந்துள்ளது எண்ணும் எழுத்தும் ஆகும். இவ்வெண்ணயும் எழுத்தை யும் உறுதிப்படுத்தி உன்னதமாக்குவது வாசிப்பு. இச் செயற்பாடு ஆரம்பக் கல்வியில் ஊற்றெடுத்து மனித வாழ்வின் இறுதி வரை நிலைத்து நிற்பது யாவரும் அறிந்ததே.

இதனாலேயே வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்ற கருத்து இன்று வரை நிலைத்திருக்கிறது. வாசிக்கத் தெரிந்தவனே உலகின் புது யுகத்துக்கு வழி காட்டியாவான் .மாறும் உலகில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் சிற்பியாகத் திகழ்ந்தான் என்பது வரலாற்றில் கண்ட உண்மையாகும்.

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது. ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன், எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் என்னைப் பயன்படுத்துங்கள் போன்ற பல சுலோகங்கள் பாடசாலைகளிலும், நூலகங்களிலும், சனசமூக நிலையங்களினதும் சுவர்களில் எழுதப்பட்டு இருந்த போதிலும் அவையெல்லாம் காட்சிப் பொருளாக உள்ளவையேயன்றி செயல் வடிவத்துக்கான வாய்ப்பினை வழங்கவில்லை என்ற உண்மை மறுக்க முடியாததொன்றாகும்.

அதனால் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வாசிப்பு புறக்கணிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட குறிப்புரைக் கல்வியும், மனனக் கல்வியும் செல்வாக்குப்பெற்றன. இதனால் தேடல் செயற்பாடு மங்கத் தொடங்கியது.

**பெற்றோரின் உன்னதமான பங்களிப்பு**

பெற்றோர்கள் கட்டங் கட்டமாக பிள்ளைகளுடன் சேர்ந்து தாமும் வாசித்தலும் வழிகாட்டலும் வரவேற்கத்தக்கதாகும். சொற்களை எழுதியோ அச்சு ஊடகத் தாள்களாப் பயன்படுத்தியோ பிள்ளைகளை உற்சாகப்படுத்தலாம். இதன் மூலம் திறனை விருத்தியடையச் செய்யலாம். மாறாகத் தண்டனையுடன் கூடிய செயற்பாடுகளிலீடுபடுவது பொருத்தமானதல்ல. தற்காலத்தில் பத்திரிகைகளிலும் சுவரொட்டிகளிலும் கவர்ச்சிகரமான பல விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டும் ஒட்டப்பட்டும் காணப்படுவதால் வாசிப்புக்கு ஓர் ஊடகமாக அவற்றைப் பயன்படுத்தலாம்.

இச் செயற்பாடு பாடப் புத்தகத்தில் ஏற்பட்ட வெறுப்பை விருப்புடையதாக மாற்றும் என்பது அனுபவம் தந்த உண்மை.

எனவே இந்த ஆரோக்கியமான சூழல் பிள்ளைகளையே வாசிப்புத் திறனை விருத்தியடையச் செய்யும். வாசிப்புத் திறன் விருத்தியடைந்தால் பேச்சுத் திறன் விருத்தியடையும். பேச்சுத் திறன் விருத்தியடைந்தால் கேட்டல் திறன் விருத்தியடையும். இத் திறன்களினூடாக கிரகித்தல் திறன் ஊற்றெடுக்க ஆரம்பிக்கும். அதன் பின் கற்பனைத் திறன்களின் ஆற்றல் மிளிரத் தொடங்கும். தொடர்ந்து எழுத்துத் திறனில் தடம் பதிக்கலாம். சுருங்கக் கூறின் ஏற்ற தொனியுடன் கதைகள், சிறுவர் பாடல்கள் என்பவற்றையும் பெற்றோர்கள், மற்றோர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்கின்ற போது தேடலுக்கான, வாசிப்பிற்கான ஆர்வத்தைப் பிள்ளை வலுப்படுத்தத் தொடங்கும் என்பதும் அனுபவம் தந்த உண்மைகளில் ஒன்று.

**முன்பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு**

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் ஆர்வத்தைத் தூண்டி விடுவதில் முன்பள்ளிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அம்மாவின் அரவணைப்பில் துள்ளித் திரிந்த குழந்தை தனது குடும்பச் சூழலிலிருந்து சற்று விலகி குறிப்பிட்ட சில மணி நேரங்கள் தன்னையொத்த குழந்தைகளுடன் புதிய ஒரு உலகில் இணைந்து புதிய ஒருவரின் அரவணைப்பில் அந்த உலகிலே வாழுகின்ற புதுமையான ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் முன்பள்ளியில் காலெடுத்து வைக்கின்றது. இங்கே அன்புத் தேவை, கணிப்புத் தேவை,பாதுகாப்புத் தேவை என்பவற்றை முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்கிறது. மகிழ்ச்சியுடன் கூடிய கற்றல் செயற்பாட்டினை முன்பள்ளிகள் பிள்ளைக்கு வழங்க வேண்டுமேயன்றி எழுத்துப் பழக்குதல், ஆசிரியர்கள் வித்துவத் தன்மைக்கு கட்டியம் கூறும் வகையிலான இன்னோரன்ன செயற்பாடுகளில் முன்பள்ளிகள் ஈடுபடக்கூடாதென்பதே கல்வியியலாளர்களதும் உளவியலாளர்களதும் கருத்தாக அமைந்துள்ளது.

முன்பள்ளிகள் பிள்ளைகளின் கற்றலுக்கு ஒரு அத்திவாரமேயன்றி கட்டிடம் அல்ல என்பதைப் பெற்றோர்களும் மற்றோர்களும் அறிந்து கொள்வது நல்லதும் வரவேற்கத்தக்கதுமாகும். ஏனெனில் முன்பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் எழுதப் பழக்கவில்லை வாசிக்கப் பழக்கவில்லை எனப் பெற்றோர்கள் மட்டுமன்றி சில பாடசாலை ஆசிரியர்களும் கூட குறை கூறுவது அனுபவம் தந்த உண்மை. எனவே பெற்றோர்கள் இந்நிலையிலிருந்து விடுபடவேண்டும்.

**ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பங்களிப்பு**

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு மூன்று பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை முதன்மை நிலை ஒன்று, இரண்டு, மூன்று என்ற வகையில் விரிவடைந்து செல்கின்றது.

முதன்மை நிலை ஒன்றில் பிள்ளைகளுக்கு எழுத்துக்களை எழுதவும், ஏற்ற தெளிவுடனும் உச்சரிப்புடனும் வாசிக்கவும் வாய்ப்பினை வழங்க வேண்டிய முக்கிய கடப்பாடுண்டு.

முன்பள்ளியில் தாம் பெற்ற அனுபவங்களை முதன்மைப்படுத்தி பிள்ளை வாசிக்கத் தொடங்கும். சுருங்கக் கூறின் எழுத்து வரிசைகளை சொல்லாக மாற்றுவதற்கு ஆரம்பிக்கும். இந் நிலையில் இரு எழுத்துச் சொற்கள், மூன்று எழுத்துச் சொற்கள் என்ற வகையில் பிள்ளை சுவைக்கத்தக்கவாறு வாசிப்பின் வீச்சை விரைவுபடுத்தலாம். பாடப் புத்தகங்களுக்கு மேலாக கவர்ச்சியான ரீதியில் தயாரிக்கப்பட்ட சொல்லட்டைகள்,உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்தவும் ஒழுங்கு முறையில் எழுத்துக்களை எழுதிக் காட்சிப்படுத்துவதும், கட்புல செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்துவதும் மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறாக துல்லியமாக கற்றல்,கற்பித்தல் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதனால் வாசிப்புடன் மாணவரின் எழுத்தாற்றலும் விரிவடையத் தொடங்கும். பின் கட்டம் கட்டமாக முதன்மை நிலை இரண்டு, மூன்றினால் செயற்பாட்டினை விருத்தியாக்கலாம். அத்துடன் ஆரம்ப நிலையிலேயே வாசிப்பில் தடுக்கி விழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையினை மட்டுப்படுத்தலாம். எனவே இந்நிலையில் பெற்றோரும் ஆசிரியருடன் இணைந்து தமது பங்களிப்பினை வழங்கும் போது இருதரப்பினாலும் பலம்வாய்ந்த அத்திபாரம் ஒன்று எதிர்காலத்தின் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு அமைக்கப்படுகின்றமை சிலாகிக்கத்தக்கது.

**இடைநிலை ஆசிரியர்களின் செல்வாக்கு**

தமிழ்மொழியைப் பேசுகின்ற அனைவருக்கும் தமிழில் உயிரோட்டமுள்ள வாசிப்பு அவசியமானதும் தேவையானதும் அத்தியாவசியமானதுமாகும். ஆயின் வாசிப்புப் பயிற்சியை வழங்கும் பொறுப்பை தமிழ் ஆசிரியரிடம் மட்டும் சிறைவாசம் செய்யாமல் எல்லா ஆசிரியர்களும் துணை நின்று இதனை ஊக்குவிக்க முன்வருவதுஅவசியமானதாகும்.எனவே இதனைத் தமிழுக்கு செய்யும் தொண்டாக ஆசிரிய சமூகம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்வது பொருத்தமானதும் காலத்தின் தேவையுமாகும். இவ்வாறாக மாணவர்கள் இலகுவாகவும், விரைவாகவும் ரசனையுடனும் வாசிக்கத்தக்கவாறாக மமைத்தாள்,மேல் தலை எறியி, பல்லூடக எறியி என்பவற்றில் கொள்களஞ்சியங்களை வாசிக்கச் செய்தும் ரசனையான புத்தகங்களை வாசிக்கச் செய்வதன் ஊடாகவும் வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

வாசிப்பின் ஊக்குவிப்பு செயற்பாட்டிற்கு மற்றுமோர் படிக்கல்லாக அமைவது பாடசாலை நூலகம். பல்வேறு வகையான நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை தளமாக்கி சலிப்பின்றி ஓய்வின்றி செயற்படவேண்டிய பொறுப்பு நூலகத்தைச் சார்ந்தது. இதன் விழிப்பு நிலைக்கு வழிகாட்டியாகவும் ஆசிரிய நூலகவோ அல்லது ஒரு ஆசிரியரோ



நியமிக்கப்பட்டிருப்பார். மாணவர்களின் தேடலுக்கு வாய்ப்பளிப்பவராகவிருக்கும் அதே வேளையில் மாணவர்கள் வாசிப்புத் திறனை விருத் தியடையச் செய்வதிலும் அதீத அக்கறையுடையவராகவும் பற்றாளராகவும் விருப்பு வெறுப்புக்கு அப்பாற் பட்டவர் களாக வும் செயற்படுவது வரவேற்கத்தக்கது. நூலகம் பல்வேறு தரத்துக்குரிய நூல்களையும் குறிப்பாக அறிவைப் புகட்டும் கதைக் களஞ்சியங்கள் , சித்திரக் கதைப் புத்தக் கங்கள், சஞ்சிகைகள், தினசரி வாராந்தப் பத்திரி கைகள் என்பவற்றைத் தாங்கியதாகவும் போதி யளவு வெளிச்ச வசதி, காற்றோட்ட வசதி என்ப வற்றையுடையதாகவும் அமைய வேண்டும்.

நிறைவாக, பாடசாலையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் கட்டியம் கூறி நிற்பது வாசிப்பு. இதனைச் சீர்படுத்தி,நேர்வழியிலிட்டுக் கண்காணிக்க வேண்டிய கடமை அதிபரைச் சார்ந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பின்றி இதனை நிறைவு செய்வது இலகுவான காரியமல்ல. மறுபக்கத்தில் பெற் றோரின் ஆதரவின்றி நிறைவுசெய்வதும் இலகு வான காரியமல்ல.

மாறாக மாணவரின் மன நிலையிலும் மாறுதலேற்பட வேண்டும். தாமே வாசித்து எதையும் விளங்கிக் கொள்ளும் வகை யில் வாசிப்பில் ஆர்வத்தை தூண்டல் வேண்டும்.


**மு.விக்னேஸ்வரன்** (BA.P.G.D.E.)
அதிபர்
ஸ்ரீசைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.

ஆரம்பப் பிரிவில் பாடசாலையில் வாசிப்பு முகாம், பெற்றோர்களுக்கு விழிப்பூட்டல் கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்துவதன் மூலம் நோக்கத்தை நிறைவு செய்யலாம் என நம்பப்படுகின்றது. இதுவரை காலமாக இக் கட்டான நிலையில் பின்னடைவு நிலையிலிருந்த வாசிப்பை முன்னகர்த்தி நன்நிலைக்கு கொண்டு வருவதற்கு அனைத்துத் தரப்பினரும் இதய சுத்தியுடன் செயற்பட்டால் வாழ்வியலில் வெற்றி நிச்சயம் வாசிப்போம் வாசிப்பால் உயர்வோம்.

# முதலாவது டெஸ்டில்

# மைக்கெல் ஹசி சதம் விளாசல்; அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில்

## சேவாக்-காம்பீர் அதிரடியில் இந்தியா சிறப்பான ஆரம்பம்



(பெங்களூர்)

மைக்கெல் ஹசியும் சதமடிக்க அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 430 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் பெங்களூர் சின்னச்சாமி விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் மைக்கெல் ஹசி ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு 5-வது விக்கெட்டுக்காக ஹசியுடன் இணைந்த வோட்சன் 2 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் வோல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹடின் மைக்கெல், ஹசியுடன் இணைந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்.

இந்த ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தது. இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மைக்கெல் ஹசி டெஸ்டில் தனது 9-வது சதத்தை கடந்து அசத்த அவுஸ்திரேலிய அணி 350 ஓட்டங்களை எடுத்தது.

எனினும் மறு முனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிய ஹடின் 33 ஓட்டங்களை எடுத்த நிலையில் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் லக்ஸ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய வைற் ஆறு ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங்கிடம் பிடிகொடுத்து அரங்கு திரும்பினார்.

அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களை பறிகொடுத்து 362 ஓட்டங்களை எடுத்து 7விக்கெட்டுக்களை இழந்திருந்த அவுஸ்திரேலிய அணிக்கு தொடர்ந்து களமிறங்கிய பிறெட் லீ நிதானமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுத்தார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய மைக்கெல் ஹசி ஓட்டங்களைக் குவிக்க அவுஸ்திரேலிய அணி 400 ஓட்டங்களை கடந்தது.

எனினும் நிதானமாக ஆடிய பிறெட் லீ 27 ஓட்டங்களை எடுத்த நிலையில் சகீர்கானின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய ஜோன்சன் ஒரு ஓட்டத்துடன் சகீர்கானின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வந்த வேகத்திலேயே வெளியேறினார்.

தொடர்ந்து ஸ்ருவெட் கிளார்க் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மைக்கெல் ஹசி (15 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 146 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 430 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முதல்நாள் ஆட்டத்தில் அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 123 ஓட்டங்களையும் ஹடிச் 66 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சகீர்க்கான் 5 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களையும் மற்றும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சேவாக் -காம்பீர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.



சேவாக் தனது வழமையான அதிரடி ஆட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவிக்க இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து மழை பெய்தமையால் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் முன்னதாகவே நிறுத்தப்பட்டது. இதில் வீரேந்திர சேவாக் 43 ஓட்டங்களுடனும் காம்பீர் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். 3-ம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

## நடிகையுடன் நடனமாடிய ஹர்பஜன் புதிய சர்ச்சையில் சிக்கினார்



(அமிர்தசரஸ்)

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நடிகையுடன் நடனமாடிய விவகாரத்தில் ஹர்பஜன் மன்னிப்பு கேட்க வேண்டுமென சீக்கிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் இச் சர்சைகளுக்கு பெயர் பெற்றவர். அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸை குரங்கு என கேலி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

ஐ.பி.எல். தொடரில் சகவீரர் சிறிசாந்த் கன்னத்தில் அறைந்து தடை பெற்றார். இந்நிலையில் இவர் புதிய சர்ச்சை ஒன்றில் சிக்கியுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இவர் இராவணன் வேடமிட்டு, மோனனா சிங் எனும் நடிகையுடன் நடனமாடினார்.

இதற்கு சீக்கிய மதத்தின் முக்கிய அமைப்பான அகால் தகத் தலைவர் ஜதேந்தர் குர்பஜன் சிங் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஹர்பஜன் சீக்கியர்களின் உணர்வை புண்படுத்தி விட்டார். அவர் மன்னிப்பு கேட்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில்:

ஹர்பஜன் நெற்றியில் திலகமிட்டு, இராவணன் வேடமணிந்து தொலைக் காட்சி நிகழ்ச்சியில் நடிகையுடன் நடனமாடியது மிகவும் வருத்தம் அளிக்கிறது.

இதை பல தொலைக்காட்சிகளும் ஒளிபரப்பு செய்து வருகின்றன. ஹர்பஜனின் நடவடிக்கைகள் சீக்கியர்களின் மனதை புண்படுத்தி விட்டது.

இதை பார்த்துவிட்டு பொறுமையாக இருக்க முடியாது. தனது செயலுக்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும். அவருக்கு எதிராக இதுவரை யாரும் புகார் தெரிவிக்கவில்லை. புகார் கொடுக்கும் பட்சத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சீக்கிய முறையில் புனிதஸ்நானம் பெறவில்லை என்பதால் அவருக்கு சம்மன் அளிக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். (5)

## மூன்று கல்லூரிகள் ...

முன்னெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்றுகாலை 8.30 மணிக்கு ஆரம்ப விழாவைத் தொடர்ந்து நடைபெறும் முதலாவது போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு பதில் இணைப்பாளரும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவருமான கணேசரங்கன் கலந்து கொள்வதுடன் யாழ்ப்பாண விளையாட்டு அதிகாரி ம.நி.மோகனதாஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் 2-வது போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதுகின்றன.

இப்போட்டிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.எஸ்.பாஸ்கரன் கலந்து கொள்கிறார்.

இரண்டாம் நாளான நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் 3-வது போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டுத்துறை அதிகாரி செ.சதீஸ்குமார் கலந்து கொள்கின்றார்.

முதல் சுற்று ஆட்டங்களில் புள்ளிகள் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் இரு அணிகளும் இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவருமான நோயல் ஏ.விமலேந்திரனும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்கின்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி நடாத்தும் இருபது -20 கிரிக்கெட் தொடரானது இலங்கை வரலாற்றில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் இரண்டாவது இருபது -20 தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்திய முதலாவது பாடசாலைகளுக்கிடையிலான இருபது -20 தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது குறிப்பிடத்தக்கது.

இத் தொடரில் மோதும் மூன்று கல்லூரிகளின் கிரிக்கெட் அணிகளும் ஒன்றையொன்று சவால் மிக்க அணிகள் என்பதால் இத்தொடர் விறுவிறுப்பானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (5)


**வீடு விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் மிக பாதுகாப்பான இடத்தில் சகல வசதிகளும் கொண்ட ஒரு தனி வீடு விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
**K.சீவறட்ணம்**
றிஜிஸ்ரார் திருஞானசம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.

(1834)

# வயிற்றோட்டம், பாம்புக் கடியால் கிளி.யில் இடம்பெயர்தோர் அவலம்

கிளிநொச்சி நகரப் பகுதி வெறுமையடைந்து செல்வதனால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தர்மபுரத்திலுள்ள சுற்றயல் கூற்று வைத்தியசாலை நோயாளர்களினால் நிரம்பி வழிவதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓரிரு தினங்கள் மழை பெய்தபோதிலும் இன்னும் முறையான மாரிகால பருவமழை ஆரம்பிக்கவில்லை. இந் நிலையில் இடம் பெயர்ந்த மக்களின் 50 வீதத்திற்கும் அதிகமான மக்கள் முறையான வாழ்விட வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் 90 வீதமான இடம்பெயர்ந்த மக்கள் மலசலகூட வசதிகள் இன்றி இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வயிற்றோட்டம் மற்றும் பாம்புக் கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள். பருவ கால மாரிமழை முழுவீச்சில் ஆரம்பிக்கும் பட்சத்தில் வாழ்விட வசதிகளற்ற மக்கள் மேலும் பாதிக்கப்படலாம் என்றும் தொற்று நோய்கள் அதிகரித்து சுகாதார நிலைமைகள் மோசமடையலாம் என்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையின் தளபாடங்கள், உபகரணங்கள் ஒருதொகுதி விசுவமடு மகாவித்தியாலய கட்டடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் எனினும் கிளிநொச்சி வைத்தியசாலையின் ஒரு பகுதியை அங்கு இயங்கச் செய்யும் முயற்சி இன்னமும் கைகூடவில்லை என்றும் கிளிநொச்சி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சியிலிருந்து அனைத்து அரச திணைக்களங்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான தற்காலிக இடங்களில் செயற்பட்டு வருகின்றன. கிளிநொச்சி அரச செயலகம் கண்டவாளையிலிருந்து செயற்படுகின்றது.

அரச வங்கிகள் தர்மபுரத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலக உணவுத் திட்டத்தின் அடுத்த கட்ட உணவுப் பொருள்கள் இந்த வாரம் வரும் என எதிர்பார்த்து இடம்பெயர்ந்த மக்களும் அரச அதிகாரிகளும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

அடுத்த வாரமாவது இந்த உணவுப் பொருள்கள் வன்னிப் பகுதிக்கு வந்து சேர வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள். (ச)

## மத்திய...

உண்டு என்று கூறி வியாழன் அன்று நீண்டதொரு அறிக்கை வெளியிட்டிருந்த அ.இ.அ.தி. மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா,

நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒரு கண் துடைப்பு நாடகம். தமிழ் மீனவர்கள் தாக்கப்படும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் கருணாநிதிக்கு உண்மையிலேயே இலங்கைத் தமிழர் மீது அக்கறை இருக்குமானால் மத்திய கூட்டணி அரசில் இருந்து விலக வேண்டும். இப்படிக் கூட்டம் நடத்துவதால் எந்தவிதப் பயனும் இல்லை எனக் கூறி இருக்கின்றார். (ச-5)

## பரந்தனில்...

சிறுவர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. பரந்தனிலுள்ள குமரபுரம் மக்கள் குடியிருப்பு மீது நேற்றுக் காலை 6.25 மணியளவில் வான் படையின் கிபீர் ரக விமானங்கள் 4 தடவைகள் குண்டுத் தாக்குதலை நடத்தின. இத் தாக்குதலில் தாயும் மகளும் உட்பட 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 2 சிறுவர்களும் அடங்குவர். பொதுமக்களின் 12 வீடுகள், கால்நடைகள், பயன்தரு மரங்கள் உட்பட அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

குண்டுத் தாக்குதலில் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்தவரும் பரந்தன் இந்து வித்தியாலய பாடசாலையின் ஆசிரியருமான அருமைநாதன் சந்திராதேவி (வயது-50) சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். அவரின் மகளான அ.அச்சியா (வயது-10) மற்றும் மனோகரன் உஷா (வயது-32) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பலனளிக்காதநிலையில்பின்னர்உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமி அண்மையில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு எழுதியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. குமரபுரத்தைச் சேர்ந்தவர்களான தா.அருமைநாதன் (வயது-52) அவரின் மகனான அ.அஜிதன் (வயது-12), த.சிவானந்தன் (வயது-39), க.யோகம்மா (வயது-65), சிறிகாந்தா துவாரகன் (வயது-13) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த ஒருவரின் விபரம் தெரியவரவில்லை. அதேநேரம் நேற்றுக் காலை 7.15 மணியளவில் முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்தை அண்மித்த மக்கள் குடியிருப்புப் பகுதியில் வான்படை குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. (ச-5)

## சென்னையில் மறியல் போராட்டம் நடத்திய...

சாலையிலுள்ள காயிதே மில்லத் பெண்கள் கல்லூரி அருகேயிருந்து ஊர்வலம் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் காலையிலிருந்தே இன உணர்வாளர்களும் கட்சியினரும் ஏராளமானோர் திரண்டனர். இந்த மறியல் போராட்டத்திற்குக் கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ. தலைமை தாங்கினார்.

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கூட்டத்திற்கு வந்து தனது ஆதரவைத் தெரிவித்தார். அ.தி.மு.க. சார்பில் அக் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர் முத்துசாமி கலந்து கொண்டார். கூட்டத்தில் உரையாற்றிய வை.கோ., இப் பிரச்சினை யில் தமிழக அரசும் இந்திய அரசும் துரோகம் இழைத்து வருவதாகக் குற்றஞ்சாட்டினார்.

இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசு இராணுவ உதவி வழங்கிடக் கூடாது என்றும் சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அங்கு போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உணவு, உடை, மருந்து போன்ற அடிப்படை வசதிகளைக் கூடச் செய்து கொடுக்க மறுக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான எனது நிலை தொடரும் என்றும் அவர்களது சுதந்திரப் போராட்டத்தை ம.தி.மு.க. தொடர்ந்து ஆதரிக்கும் என்றும் தெரிவித்தார்.

பின் பேரணியாகப் புறப்பட்டு மத்திய அரசு அலுவலகம் முன்பாக மறியல் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றபோது பொலிஸார் அவரையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அவரது கட்சித் தொண்டர்களையும் கைது செய்து வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். (ச-5)

## சர்வகட்சிக் குழுக் கூட்டம்...

சர்வகட்சி மாநாடு இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது. இதற்கான அழைப்பிதழ்கள் ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்கவால் கையெழுத்திடப்பட்டு அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலரி மாளிகையில் இன்று நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் ஒரு கட்சியிலிருந்து நால்வரைப் பிரதிநிதித்துவப்படுத்துமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுவே இந்த வருடம் நடத்தப்படும் முதலாவது சர்வகட்சி மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தால் நடத்தப்படும் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என தமது கட்சி ஏற்கனவே முடிவெடுத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று, உயிரிழந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் இறுதிக் கிரியைகள் நடைபெறுவதால் அனைத்து உறுப்பினர்களும் அதில் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மோதலில் வெற்றி பெறுவதென தீர்மானித்த பின்னர் ஏன் அரசாங்கம் இவ்வாறு சர்வகட்சி மாநாட்டை நடத்துகின்றது என திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பினார்.

இதேவேளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் இணக்கம் காணப்படாத விடயங்கள் சர்வகட்சி மாநாட்டில் கூடி ஆராயப்படும் எனவும் அதில் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் திட்ட யோசனைகள் குறித்து அரசாங்கத்தின் சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை நீண்ட காலமாகக் கூடி எவ்வித காத்திரமான முடிபையும் எடுக்காத இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதில் தமக்கு உடன்பாடில்லை என ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இன்றைய கூட்டத்திற்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (ச-5)

## புலிகளின் தலைவர் பிரபா...

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அல்லது சரணடையும் வரை அவர்களுடன் எந்தவிதமான சமாதானப் பேச்சுக்களுக்கும் இடமில்லை.

நாட்டைத் துண்டாடி அதனைப் பயங்கரவாதிகளிடம் எம்மால் ஒப்படைக்க முடியுமா? என ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடைய வேண்டிய சூழ்நிலையே தற்போது விடுதலைப் புலிகளுக்குத் தோன்றியுள்ளது.

மோதலில் இறுதியை அடைவதே இன்னமும் எஞ்சியுள்ளது என ஜனாதிபதி கூறினார். இறுதித் தீர்வு அரசியல் தீர்வாகவே இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

எனினும் பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாக மட்டுமன்றி வேறு எந்த வழியாலும் அழிக்க முடியாது எனக் கூறினார். விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு அழுத்தம் கொடுத்து அதில் எமது அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. இதற்கு மேல் வழங்குவதற்கு எதுவுமில்லை.

குறுகிய காலப் பகுதியில் கிழக்கை மீட்ட அரசாங்கம் அங்குள்ள மக்களின் மனங்களையும் மாற்றியிருப்பதாகவும் அதேபோல் வடக்கு விரைவில் மீட்கப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

ஆனாலும் விடுதலைப்புலிகளின் தலைவருடனோ அல்லது அந்த அமைப்புடனோ எந்தவிதமான தனிப்பட்ட பகைமையும் இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கி பிரத்தியேக செவ்வியில் கூறினார்.

இதேவேளை அல்ஜசீரா தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் குழுவொன்று இராணுவத்துடன் கிளிநொச்சிக்குச் சென்று அங்கு மோதல் நடைபெறும் பகுதிகள் மற்றும் இராணுவத்தினர் அங்கு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை வீடியோ ஒளிப்பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## வடக்...

டிக்ஷன் வட மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாணத்தின் முதலாவது ஆளுநராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா பதவிவகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நியம...

வருகை தரவுள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையிலான குழுவினர் யாழ்.மாவட்ட கல்வி நிர்வாக சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளை ஆராயவுள்ளனர். (ச-5)

## கொடிகாமத்...

நேற்று முன்தினமிரவு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவரது உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-3)

உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்
சகல விதமான கணணி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்........

Your Best Chance

2.0 GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GB Hard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
17" LCD Monitor, UPS
Keyboard & Optical Mouse.
Speker

CD&DVD ALA Grade

1.8GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GBHard Disk
DVD R/W
ATX Case with SMPS,
15" CRT Moniter, UPS
Keyboard & Optical Mouse
Speaker

Computer tables&Chairs

Flash Drive-TDK, adata,Kingston
Mp3,Mp4 Players
Sunglass with Mp3 player
Printers, Scanners & Woofers



திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

DV 2010க்கான அமெரிக்கா லொத்தர் விசா



DV 2010 அமெரிக்கா லொத்தர் விசாவிற்கான
விண்ணப்பங்களை எமது நிறுவனத்தினூடாக
அனுப்பிக்கொள்ளப்படும். மற்றும் இதற்கான
மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தினுடன்
நேரில் தொடர்பு கொள்ளவும்.

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

பதவி வெற்றிடம்

நிர்வாக உத்தியோகத்தர்

வயது- 40-65, அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், வலம்புரி நிறுவனத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- நிர்வாகம்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.